REGISTERED AS NEWSPAPER

# உதயன் 665

பக்கங்கள் -14 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 4 .. ..1

சுடர் :35 கதிர் :158 சித்திரை 18ஆம் நாள் வெள்ளிக்கிழமை 01 மே 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## யாழில் பாண் விலை 5 ரூபாவால் அதிகரிப்பு

### இன்று தொடக்கம் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம், மே 1
யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று தொடக்கம் ஒரு இறாத்தல் பாண் 63 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும். பணிஸ் உள்ளிட்ட ஏனைய உற்பத்திப் பொருள்களின் விலைகளில் மாற்றமில்லை என்று யாழ்ப்பாண மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கச் செயலர் கா.பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

02

## முன்னாள் எம்.பிக்களை திடீரென சந்திக்கிறார் மகிந்த

### திங்கள் அலரி மாளிகையில் அவசர கூட்டம் கூட்டமைப்பும் கலந்து கொள்ளும்

கொழும்பு,மே 1
நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வரும் நிலையில், எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரையும் அலரிமாளிகைக்கு வருமாறு பிரதமர் அலுவலகம் அழைப்பு விடுத்துள்ளது.

02

கொழும்பு, மே 1
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 16 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதையடுத்து தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 649 இலிருந்து 665ஆக அதிகரித்துள்ளது.

02

## தபாலகங்களுக்கு பேனாக்களுடன் வாருங்கள்

### தபால் மா அதிபர் வேண்டுகோள்

கொழும்பு, மே 1
தபாலகங்களுக்கு பொதுமக்கள் வருகை தரும்போது, உரிய ஆவணங்களில் கையொப்பம் இடுவதற்காக பேனைகளைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ள

02

# முப்படைகளை யாழ் ஏற்றிவந்த சாரதி, நடத்துனர்கள் தனிமையில்

### இராணுவ வாகனங்கள் இருக்கத்தக்கதாக இ.போ.ச. பஸ்களை பயன்படுத்தியதால் சிக்கல்

யாழ்ப்பாணம், மே 1
விடுமுறைக்குச் சென்ற முப்படையினரை யாழ்ப்பாணத்துக்கு ஏற்றி வந்த இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் 31 பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். இராணுவ வாகனங்கள் மற்றும் அவற்றுக்குரிய சாரதிகள் உள்ளபோதும், பாதுகாப்புத் தரப்பினர் இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்துகளையும் அவற்றுக்குரிய சாரதிகள் மற்றும் நடத்துனர்களைப் பயன்படுத்தியதாலேயே இந்த நிலைமை எழுந்துள்ளது.

02

## ஜா எல பெண்ணுக்கு யாழில் கொரோனா

யாழ்ப்பாணம், மே 1
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சந்தேகத்தில் நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்ட ஜாஎலவைச் சேர்ந்த பெண்ணுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் இது தெரிய வந்துள்ளது.

02

## மரத்திலிருந்து தவறி வீழ்ந்து சிறுவன் பலி

யாழ்ப்பாணம்,மே.1
மரத்தில் ஏறிய சிறுவன், அதிலிருந்து தவறி வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான். இந்தச் சம்பவம் கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் நேற்று மாலை நடந்துள்ளது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பாஸ்கரன் மதுமிதன் (வயது 13) என்ற சிறுவனே உயிரிழந்தார்.
அருகில் இருந்த வளவில் நின்ற பட்ட தென்னைமரத்தில் கிளி பிடிக்க சிறுவன் ஏறியுள்ளான். வீட்டார் எச்சரித்தும் ஏறிய நிலையில் மரம் முறிந்து விழுந்து, படுகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில்

02

## கொரோனா பரவாது என திடமாகக் கூற முடியாது

### சுகாதார பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

கொழும்பு, மே 1
இலங்கையில் கொரோனா வைரஸ் கொத்தணி முறையில் பரவுதல் அல்லது பரவா திருத்தல் தொடர்பில் தற்போதைக்கு எதிர்வு கூற முடியாது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில்ஜா சிங்க தெரிவித்துள்ளார்.

02



## கொரோனா தொற்றுடன் 269 கடற்படையினர்

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, மே 1
வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த 269 சிப்பாய்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இவ்வாறு கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்றிரவு தெரிவித்தார்.

02

## சிவபூமி மனவிருத்தி பாடசாலை முதலிடம்

யாழ்ப்பாணம், மே 1
இலங்கை சமூக சேவைகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சுய அபிமானி 2019 திட்ட ஆய்வில் கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றுள்ளது.

02

## பொலிஸ் ஊரடங்குக்கு சட்டமா அதிபர் அனுமதி

கொழும்பு, மே 1
கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த பொலிஸார் முன்னெடுத்த ஊரடங்குச் சட்டம் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் அனுமதிப்பதாக சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா, பதில்

02

## மணிவண்ணனிடம் ரி.ஐ.டி. விசாரணை

யாழ்ப்பாணம், மே 1
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனிடம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.
கொக்குவிலில் உள்ள சட்டத்தரணி மணிவண்ணனின் வீட்டுக்கு நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் சென்ற பயங்கரவாத

02

## யாழில்...

இது தொடர்பில் அனுப்பி வைத்துள்ள ஊடகச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

யாழ்ப்பாண மாவட்டத்தில் பேக்கரி உற்பத்திப் பொருள்களுக்கான உள்ளீடுகளின் விலை அதிகரித்துள்ளது. மா, சீனி, தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளமையால், தரத்துடனும் 450 கிராம் நிறையுள்ள பாணை 58 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியாது. எனவே 63 ரூபாவுக்கு விற்பனை செய்ய வேண்டும் என்று பேக்கரி உரிமையாளர்கள் கடந்த 24ஆம் திகதி ஆலோசனை நடத்தியிருந்தனர். இது தொடர்பில் மாவட்டச் செயலருக்கும் தெரியப்படுத்தப்பட்டு அவருடனும் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

பெப்ரவரி மாதம் 29ஆம் திகதிக்கு முன்னர் விற்கப்பட்ட விலையான 63 ரூபாவுக்கு பாணை விற்பனை செய்வது என்று தீர்மானித்துள்ளோம். இன்று மே முதலாம் திகதி தொடக்கம் இது நடைமுறைப்படுத்தப்படும். கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் இருந்த விலைக்கு பேக்கரி உற்பத்திக்கான உள்ளீடுகளின் விலைகள் விற்கப்படும் பட்சத்தில் பாண் விலை மீண்டும் குறைக்கப்படும் என்றுள்ளது. (ஒ,5)

## தபாலகங்களுக்கு...

ப்பட்டுள்ளது. தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன, பொதுமக்களிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

எதிர்வரும் 4ஆம் திகதி உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்காக நாடளாவிய ரீதியிலுள்ள தபால் அலுவலகங்கள் திறக்கப்படவுள்ளதாகத் தெரிவித்த அவர், அரசால் வழங்கப்பட்டுள்ள சுகாதார ஆலோசனைகளை பின்பற்றி பொதுமக்கள் முகக் கவசங்களை அணிந்து வருகை தர வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொரோன வைரஸ் தொற்று ஏற்படும் என்பதால், எந்தவொரு தபால் அலுவலங்களினாலும் பேனை வழங்கப்பட மாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை தபால் அலுவலகங்கள் திறக்கப்பட்டதும் பொதுமக்களுக்கான மாதாந்த உதவிக் கொடுப்பனவு, மூத்த பிரஜைகள் கொடுப்பனவு ஆகிய சேவைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

முன்னர் பொதுமக்களிடமிருந்து கையொப்பங்களைப் பெறுவதற்காக ஒரு படிவத்தை மாத்திரம் தபால் அலுவலகங்கள் பயன்படுத்தியிருந்த நிலையில், தற்போது வெவ்வேறு படிவங்களைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ,5,22)

## மரத்திலிருந்து...

சேர்க்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இறப்பு விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (க-26,111)

## ஜா எல...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் 76 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சந்தேகத்தில் சேர்க்கப்பட்ட 9 பேர், வெளிநோயாளர் பிரிவில் பரிசோதிக்கப்பட்ட 7 பேர், தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவர், வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 3 பேர், முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவர், முல்லைத்தீவு வெலிஓயா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஒருவர், முல்லைத்தீவு புதுமாத்தளன் தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்த 54 பேர் என 76 பேரின் மாதிரிகள் பெறப்பட்டன.

இதில் புதுமாத்தளனில் தனிமைப்படுத்தப்பட்ட படையினர், வெலிசறை கடற்படை முகாமில் பணியாற்றிய கொரோனா தொற்று உறுதிப்படுத்திய சிப்பாயுடன் பேருந்தில் பயணித்த அடிப்படையில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

முழங்காவில் தனிமைப்படுத்தல் மையத்துக்கு கடந்த 11ஆம் திகதி ஜாஎல உள்ளிட்ட தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் அழைத்து வரப்பட்டிருந்தனர். அவர்களில் 4 பேருக்கு கடந்த 13ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

கொரோனா தொற்றாளியாக அடையாளம் காணப்பட்டவரது சகோதரியே நேற்று கொரோனா தொற்றுக்கு உள்ளானவராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவருக்கு கொரோனாவுக்கான அறிகுறிகள் கடந்த இரண்டு நாள்களாகத் தென்பட்டுள்ளது. இதனையடுத்து நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சந்தேகத்தின் அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் அவருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஒ,5)

## முன்னாள்....

தமிழ்த் தேசியக் கூட்;டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த அழைப்புக் கிடைத்துள்ளதுடன், அவர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது. இதன்போது நாடாளுமன்றத்தைக் கூட்டக் கோரும் எதிர்க்கட்சிகளின் யோசனை தொடர்பிலும் ஆராயப்பட்டது. அதற்கு அமைவாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அலரிமாளிகைக்கு அழைத்துப் பேச முடிவு செய்யப்பட்டது.

இதற்கு அமைவாக எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அலரிமாளிகையில் கூட்டம் நடைபெறவுள்ளது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

'பிரதமர் அலுவலகத்திலிருந்து அழைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வந்துள்ளது. இன்று இந்த அழைப்புக் கிடைத்துள்ளது. நாட்டின் தற்போதைய நிலைமையில் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து பேச்சு நடத்துவதற்காக அனைத்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பிரதமர் அழைத்துள்ளமை வரவேற்கத்தக்கது. திங்களன்று நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் நாட்டினதும் மக்களினதும் நலன் கருதிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடுகளைப் பிரதமரிடம் நாம் எடுத்துரைப்போம்' என்று அந்தக் கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். (ஒ,5,22)

## 663...

எது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதேவேளை, நேற்று மேலும் 18 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 136 இலிருந்து 154 ஆக உயர்ந்துள்ளது.

தற்போது 504 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, மேலும் 187 பேர் வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (எ-22)

## முப்படைகளை...

'இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணத்திலுள்ள 16 பேருந்துகள் முப்படையினரையும் ஏற்றி வரப் பயன்படுத்தப்பட்டன. அவற்றின் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் 31 பேர் வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்' என்று வடபிராந்திய முகாமையாளர் அமீன் 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, முப்படையினரின் சகல விடுமுறைகளையும் நிறுத்துவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது. அவர்கள் உடனடியாக முகாம்களுக்குத் திரும்புவதற்கு வசதியாக திங்கட்கிழமை ஊரடங்கும் பிறப்பிக்கப்பட்டிருந்தது. விடுமுறையில் சென்ற பாதுகாப்புத் தரப்பினர் முகாம்களுக்கு அனுமதிக்கப்பட முன்னர் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முப்படையினரையும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வருவதற்காக யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்துச் சாலைகளையும் சேர்ந்த 16 பேருந்துகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவர்களை அழைத்து வருவதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாரதிகளும், நடத்துனர்களுமே ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். படையினரை அழைத்து வந்த சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் வீடுகளுக்குத் திரும்பிய நிலையில் அயலில் உள்ளவர்களால் அது தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து சாரதிகளையும், நடத்துனர்களையும் தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

## கொரோனா பரவாது...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது :

கடற்படையினரில் தொற்றுக்குள்ளானவர்களை இனங்காண்பதற்கான நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன.

கடற்படையினருடன் நெருங்கிப் பழகியவர்கள், அவர்களின் குடும்பத்தினர் , பிரதேச வாசிகள் எதிர்காலத்தில் தொற்றுக்குள்ளாகக் கூடும் என்று சந்தேகம் எழுந்துள்ளது. இவர்கள் தொடர்பில் சுகாதார சேவை மற்றும் புலனாய்வுப் பிரிவினர் அவதானம் செலுத்தியுள்ளனர்.

கொரோனா வைரஸ் கொத்தணி முறையில் தீவிரமாகப் பரவலடையாது என்று எதிர்பார்க்கின்றோம்.

அத்தோடு கடற்படையினரில் வைரஸ் தொற்றுக்கு உள்ளானோரை இனங்காண்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தொற்றுக்குள்ளானோருடன் தொடர்பினைப் பேணியவர்களை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனினும், கொத்தணி முறையில் பரவுதல் குறித்து தற்போது எதிர்வு கூற முடியாது.

வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எவ்வாறிருப்பினும் அமைச்சினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுவதே வைரஸ் கட்டுப்படுத்தலுக்கான சிறந்த முறைமையாகும். என்றார். (து)

## சிவபூமி...

2003 ஆம் ஆண்டு கலாநிதி ஆறு.திருமுருகனால் நிறுவப்பட்ட இந்தப் பாடசாலை சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

சர்வதேச ரீதியில் மூன்று தடவை சிறப்புத் தேவைக்குரிய மாணவர்களின் ஒலிம்பிக் போட்டியில் கிறீஸ் நாட்டிலும், ஆஸ்ரேலியாவிலும் மற்றும் அமெரிக்காவிலும் இப்பாடசாலை மாணவர்கள் பங்குபற்றியதுடன் பதக்கங்களும் பெற்று இலங்கைக்கு பெருமை சேர்த்தனர். (ஐ)

## கொரோனா...

269 கடற்படையினரில் 190 பேர் வெலிசறை கடற்படை முகாமுக்குள்ளும், ஏனைய 79 பேரும் கடற்படை முகாமுக்கு வெளியே விடுமுறையில் இருந்தபோதும் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்' எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதைவிட கடற்படை சிப்பாய்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் என்று 16 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலும், தரைப்படையினர் 6 பேரும், விமானப் படையினர் 2 பேரும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்' எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டே ஊரடங்கு அவ்வப்போது நடைமுறைக்கு வருகின்றது. இருந்தாலும் இயன்றளவு விரைவில் சுகாதாரத் துறையினரின் ஒத்துழைப்புடன் நாட்டை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவோம். தனிமைப்படுத்தல் நிலையங்களில் படையினர் தரையில் படுக்கின்றார்கள் என்றும் அவர்கள் கவனிக்கப்படுவதில்லை என்றும் விமர்சனங்கள் சொல்லப்படுகின்றன. அது குறித்து நாம் தேடுகின்றோம்.

மக்களைக் கட்டிலில் படுக்க வைக்க நாங்கள் தரையில் படுப்போம். அதற்காக நாங்கள் வெட்கப்படவில்லை. தரையிலும் காடுகளிலும் படுத்த அனுபவங்கள் எங்களுக்கு உள்ளன.

அரச புலனாய்வுத் துறையினரின் ஒத்துழைப்புடன் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோரைப் பிடித்து வருகின்றோம். ஏனெனில் தொற்றுக்குள்ளானவர்கள் பலர் அவர்களுடன் பழகியவர்களின் விவரங்களை மறைப்பதால் இப்படி நடக்கின்றன.

இயன்றளவில் நாங்கள் நிலைமைகளைக் கட்டுப்படுத்தி வருகின்றோம். ஊரடங்கை நீடிக்கவே மக்கள் கோருகின்றார்கள். நிலைமைகளைப் பார்த்து சரியான முடிவை அரசு எடுக்கும் என்றார். (ஒ,5,22)

## பொலிஸ்...

பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவுக்கு அறிவித்துள்ளார்.

பதில் பொலிஸ் மா அதிபர், சட்டமா அதிபரிடம் பொலிஸார் முன்னெடுத்த ஊரடங்குச் சட்டம் மற்றும் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளின் சட்டபூர்வத் தன்மை தொடர்பில் மேலதிக ஆலோசனை கோரியிருந்த நிலையிலேயே, நேற்றுப் பொலிஸாரின் நடவடிக்கையை அனுமதித்து சட்டமா அதிபர் பதில் அனுப்பியுள்ளார் என்று சட்டமா அதிபரின் செய்தித் தொடர்பாளர் அரச சட்டவாதி நிஷாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார். (எ-22)

## மணிவண்ணனிடம்...

விசாரணைப் பிரிவினர், சில ஆவணங்களைக் காண்பித்து சுமார் 30 நிமிடங்கள் விசாரணைகளை முன்னெடுத்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

"மாவீரர் தினம் அனுசரித்தமை தொடர்பில் ஒளிப்படம் ஒன்றைக் காண்பித்த பயங்கரவாத விசாரணைப் பிரிவினர், அந்த ஒளிப்படத்தை முன்வைத்து, நபர் ஒருவரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதனை உறுதி செய்யும் வகையில் விசாரிப்பதற்கே வந்ததாகவும் தெரிவித்திருந்தனர்" என்று சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

எனினும் அது சில வருடங்களுக்கு முன்னர் எடுத்த பழைய ஒளிப்படமாக உள்ளதால், தனக்கு அந்த நிகழ்வு தொடர்பில் நினைவில் இல்லை என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டார். (க-37,26,111,20)

# அரசுடைய அசமந்தமே நெருக்கடிக்கு காரணம்

## முன்னாள் எம்.பி சந்திராணி பண்டார குற்றச்சாட்டு



கொழும்பு, மே 1

**கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் அரசு கவனயீனமாகச் செயற்பட்டதன் காரணமாகவே வைரஸ் பரவி பெரும் நெருக்கடி நிலைமையை தற்போது எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. வைரஸ் தொற்றிலிருந்து நாட்டு மக்களைக் காப்பதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.**

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திராணி பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொவிட் 19 எனப்படும் கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கடந்த ஜனவரி மாதத்தின் இறுதிப் பகுதியிலேயே நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். ஆளும் தரப்பினர் அதனைப் பொருட்படுத்தியதாகத் தோன்றவில்லை. கொரோனா தொற்று தொடர்பில் எதிர்நோக்க வேண்டி ஏற்படக்கூடிய நெருக்கடி நிலைமைகளை கருத்திற்கொள்ளாது அரசாங்கம் செயற்பட்டதன் விளைவே நாட்டு மக்கள் இன்று பெரும் நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றனர்.

வைரஸ் தொற்றுத்தொடர்பில் எதிர்க்கட்சி பேசினால் தேர்தலுக்கு பயந்தே கொரோனா தொற்று தொடர்பில் பேசுவதாக சிலர் சித்தரித்து வருகின்றனர். ஆனால் எமக்கு தேர்தல் தொடர்பில் எந்த அச்சமும் கிடையாது. வைரஸ் தொற்றிலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாப்பதே எமது பிரதான நோக்கமாகும்.

அரசாங்கம் வைரஸ் பரவலை தடுப்பதற்காக செயற்படுத்தி வரும் செயற்பாடுகள் தொடர்பில் திருப்தியற்ற நிலமை ஏற்பட்டுள்ளது. ஊரடங்கு நடைமுறைப்படுத்தியுள்ள பகுதிகளில் அது முறையாகச் செயற்படுத்தப்படுகின்றதா என்று சந்தேகம் எழுந்துள்ளது. இவ்வாறு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதிலும் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்படாத பகுதிகளிலும் வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். இதனால் இந்த செயற்பாடுகள் தொடர்பில் விளக்கம் தேவைப்படுகின்றன -என்றார். (ப)

# வடக்கிலும் மாலையில் கடுங் காற்றுடன் மழை

*எதிர்வுகூறியது வளிமண்டலவியல் திணைக்களம்*

கொழும்பு, மே 1

மத்திய, தென்ஊவா, கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாணங்களிலும் வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் மாலை வேளை அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல் மற்றும் தென்மாகாணங்களிலும் மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களிலும் கரையோரப் பிரதேசங்களிலும் காலை வேளையில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மன்னாரிலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு திசையிலிருந்து வீசக்கூடுவதுடன் நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றானது வடமேற்குதிசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 2030 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகள் சாதாரண முதல் மிதமான கொந்தளிப்பாகக் காணப்படும். இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது (மணித்தியாலத்துக்கு 7080 கிலோ மீற்றர் வரையும்) பலமான காற்று வீசுவதுடன் அந்தக் கடற்பிரதேசங்கள் கொந்தளிப்பாகவும் காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ப)

# யாழ். தனியார் பேருந்துகாரர் இடரை எதிர்நோக்கியுள்ளனர்

*கவனிக்குமாறு அவர்களின் சங்கம் கோரிக்கை*

யாழ்ப்பாணம், மே 1

தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணத்தில் சேவையில் ஈடுபட்டு வந்த தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் சாரதிகள் மற்றும் காப்பாளர்கள் பெரும் இடரை எதிர்நோக்கியுள்ளனர் என்ற யாழ்ப்பாண மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவர் சிவகரன் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக தற்போது பஸ் சேவைகள் யாவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெற்றுவருகின்றன. அதிலும் பஸ்ஸில் அரைவாசி ஆசனத்துக்கு மட்டுமே மக்களை ஏற்றுமாறு கோரிக்கை விடுக்கப்படுகின்றது. இதனை நாம் செவிமடுத்துச் செயற்படும்போது நமது சாரதிகள் மற்றும் காப்பாளர்கள் பெரும் கஸ்டத்தை எதிர்நோக்குகின்றனர்.

எனவே அரசு இந்த விடயத்தைக் கருத்திற்கொண்டு நமக்கு இலகு கடன் திட்டம் அல்லது வேறு ஏதாவது மானிய அடிப்படையிலான உதவிகளை மேற்கொண்டு நமக்கு உதவி புரிய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 2500க்கும் மேற்பட்டோர் சாரதிகள் மற்றும் நடத்துநர்களாகக் கடமையாற்றி வருகின்றனர். அவர்கள் அரைவாசி பேருக்கு 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். என்று அவர் மேலும் தனது கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (த)



# மருத்துவ ரோபோ நேற்று மகிந்தவிடம் கையளிப்பு

கொழும்பு, மே 1

இலங்கையில் தயாரிக்கப்பட்ட மருத்துவ ரோபோ இயந்திரம் பிரதமர் மகிந்த ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவராகிய பமுதித பிரேமசந்திர என்பவரே இந்த ரோபோ இயந்திரத்தை தயாரித்துள்ளார். அந்த இயந்திரம் பிரதமர் மகிந்த ராஜபக்சவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ப)



# எதிர்க் கட்சிகளின் கூட்டுக் கடிதம் ஒருமித்த கருத்தை உருவாக்கியது

*முன்னாள் சபாநாயகர் தெரிவிப்பு*

கொழும்பு, மே 1

எதிர்க் கட்சிகளால் வழங்கப்பட்டுள்ள கூட்டுக் கடிதம், தேசிய ரீதியில் ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்கு உகந்த சூழலை அரசுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார். தனது டுவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் உள்ளதாவது:

கொவிட் 19 கொரோனா வைரஸிற்கு எதிரான போராட்டத்தில் ஒத்துழைப்பை வழங்குவதாக எதிர்க்கட்சிகளால் வழங்கப்பட்டுள்ள கூட்டுக் கடிதம், தேசிய ரீதியில் ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்கு உகந்த சூழலை அரசுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. இது மக்கள் பாதுகாப்பை உறுதிசெய்யும் அதேவேளை உற்பத்தி, நிர்மாணம் போன்ற பொருளாதார மீட்சிக்கு அத்தியாவசியமான துறைகளை மீண்டும் திறக்க உதவியாகவும் அமையும்.

அரசு அனைத்துத் தரப்பினருடனும், தலைவர்களுடனும் ஒரு ஆரோக்கியமான கலந்துரையாடலில் ஈடுபடுவது அவசியமாகும். ஆனால் அது இப்போது செயற்திறன் மிக்கவகையில் நடைபெறுவதைக் காணமுடியவில்லை - என்றுள்ளது. (ப)

# மன்னாரில் அனுமதி பெறாத எவருக்கும் மீன் கிடையாது

## நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 1

மன்னார் மாவட்டச் செயலக அனுமதி பெறாது, பிற மாவட்ட அனுமதியுடன் உள்நுழைபவர்களுக்கு மீன் வழங்குவதில்லை என்று பிரதேச செயலக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

புத்தளம், நீர்கொழும்பு ஆகிய இடங்களில் கொரோனா தொற்று அதிகளவில் பதிவாகியுள்ளன. அந்த மாவட்டங்களிலிருந்துவந்து 35 வாகனங்கள் மீன் ஏற்றிச் செல்கின்றன. இது எதிர்காலத்தில் மோசமான நிலைமையை ஏற்படுத்தும். இவர்களுக்குக் கடல் உணவுவழங்குவதை நிறுத்த வேண்டும்.

இதேநேரம் மன்னார் மீனவர்கள் மேற்கொள்ளும் மீன் பிடியை மாவட்ட மக்களுக்குச் சந்தைப்படுத்த மோட்டார் சைக்கிள் மற்றும் சிறிய வாகனங்கள் என 208 வாகனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று மன்னார் மாவட்டத்தவர்களின் கூலர் மற்றும் பாரவூர்தி, படி வகைகளைச் சேர்ந்த 85 வாகனங்கள் வெளிமாவட்டத்துக்கு கடல் உணவுகளை எடுத்துச் செல்ல மாவட்டச் செயலகத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-105)

# குழந்தைக்கு துன்புறுத்தல் சிலாபத்தில் பெண் கைது

கொழும்பு, மே 1
குழந்தையை துன்புறுத்திய குற்றச் சாட்டில் சிலாபம் ஜயபிம பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
சம்பவம் தொடர்பில் 44 வயதுடைய பெண் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. அத்துடன் சம்பவத்தில் காயமடைந்த குழந்தை சிலாபம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்படுகிறது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (ப)

# நாட்டில் இல்லாத அதிகாரத்தை எப்படித்தான் செயற்படுத்துவது?

## கேட்கின்றார் நீதியமைச்சர் சிறிபாலடி சில்வா

**கொழும்பு, ஏப். 30**
**"கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை ஜனாதிபதி மீண்டும் கூட்டுவதற்கு எவரும் நீதிமன்றத்தை நாட முடியாது. இல்லாத அதிகாரத்தை செயற்படுத்துமாறு ஜனாதிபதிக்கு எதிர்தரப்பினர் அழுத்தம் கொடுப்பது தவறான செயற்பாடு" என்று நீதியமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.**



கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை கூட்டுமாறு ஐக்கிய தேசிய கட்சியினர், எதிர்க் கட்சித்தலைவர்மற்றும்பங்காளிக்கட்சிகள் அனைவரும் ஒன்றிணைந்து ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.
நாடாளுமன்றம் தொடர்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அரசமைப்பின் பிரகாரம் வரையறுக்கப் பட்டுள்ளன.
அவசரகாலச் சட்டம் இயற்றப்பட வேண்டுமாயின் மாத்திரமே கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கூட்ட முடியும். அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை தற்போது ஏற்படவில்லை.
ஆகவே ஜனாதிபதிக்கு வழங்கப்படாத அதிகாரத்தை அவரால் செயற்படுத்த முடியாது.
கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை ஜனாதிபதி மீண்டும் கூட்ட வேண்டும் என்று குறிப்பிட்டுக் கொண்டு எவராலும் நீதிமன்றத்தையும் நாட முடியாது.
நிதி தொடர்பான அதிகாரத்தை நாளை தொடக்கம் ஜனாதிபதி செயற்படுத்த முடியாது. என்று குறிப்பிடும் முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர தாராளமாக நீதிமன்றத்தை நாடலாம்.
கொரோனா வைரஸ் பரவல் வெகுவிரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு பொதுத்தேர்தல் நடத்தப்படும்.
சிறைக்கைதிகள் எவரும் இதுவரையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகவில்லை. சிறைச்சாலைக்குள் விஷேட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 4 சிறைச்சாலை களில் தனிமைப்படுத்தல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
நீதிமன்றத்தையும் சிறைச்சாலையையும் இலத்திரனியல் முறை ஊடாகத் தொடர்புபடுத்தி ஒருசில வழக்குகளை விசாரிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன- என்றார். (கு)

# துறைமுக வளாகத்தில் தொற்று நீக்கும் நடவடிக்கை

வாழைச்சேனை, மே.1
நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையினை கருத்திற் கொண்டு கொரோனா வைரஸ் தொற்றினை தடுக்கும் நோக்குடன், வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்க செல்லும் மீனவர்களின் பாதுகாப்புக் கருதி, மீன்பிடித் துறைமுகத்தில் தொற்றுநீக்கி விசிறும் பணிகள் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றன.
வாழைச்சேனை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரிடம் வாழைச்சேனை மீன்பிடித் துறைமுக முகாமையாளர் ஜோர்ஜ் றெஜினோல்ட் விஜிதரன் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம், தொற்றுநீக்கி இரசாயனத் திரவம் விசிறும் நடவடிக்கை இடம்பெற்றது.
இதன்போது மீனவர்களுக்கும், மீன் வாங்க வரும் பொதுமக்களுக்கும் நோய்கள் தொற்றாத வகையில் துறைமுகத்தின் வளாகம், அலுவலகம், பாதுகாப்பு நிலையம், மீன்கள் சேகரிக்கும் நிலையம் உட்பட்ட இடங்களில் இரசாயன திரவம் விசிறப்பட்டது. (ந-150)

# கசிப்பு மற்றும் கோடாவுடன் பெண் உட்பட மூவர் கைது!

நாட்டின் மூன்று வேறுப்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப் பட்ட சுற்றி வளைப்புகளின் போது கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடாவுடன் பெண்ணொருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
களுத்துறை தெற்கு ஹீனட்டியன்கல பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் சுற்றிவளைப்புகளின் போது கசிப்பு, மற்றும் கோடாவுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப் பட்டுள்ளார். போம்புவல பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய சந்தேக நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடம் இருந்து 61ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பு, (82 போத்தல்கள்), ஒரு இலட்சத்து 68 ஆயிரத்து 750 மில்லி லீற்றர் கோடா கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அதேவேளை மினுவங்கொட நில்பனாகொட பகுதியில்பொலிஸாரின் சோதனை நடவடிக் கைகளின் போது கசிப்பு வடித்தலுக்காகபயன்படுத்தும்கோடாக் களுடன் இன்னுமொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். 44 வயதுடைய குறித்த சந்தேக நபரிடமிருந்து 35 இலட்சம் மில்லிலீற்றர் கோடாக் கள் கைப்பற்றப்பட்டுள்ளன.
பதுரலிய பகுதியில் 70 மது பான போத்தல்களுடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது 48 வயதுடைய பெண்ணொருவரேகைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ப)

# பணியைவிட்டு தனிமையான மருத்துவரும் 12 பி.எச்.ஐயும்

## கொழும்பில் இந்தச் சம்பவம்

கொழும்பு, மே 1
கொழும்பு மத்திய பிரிவின் பிரதான சுகாதார மருத்துவ அதிகாரி, அவரின் கீழ் செயற்பட்ட மருத்துவரும் 12 பொதுச் சுகாதார பரிசோதகர்களும் இன்று தொடக்கம் பணிகளிலிருந்து விலகி சுய தனிமைப்படுதலில் ஈடுபட்டுள்ளனர். இது பற்றி அவர்கள் கொழும்பு மாநகர சபையின் பிரதான சுகாதார மருத்துவ அதிகாரிக்கு அறிவித்துள்ளனர்.
கொழும்பில் அதிக கொரோனா தொற்றாளர்களைக் கண்டறியும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட மருத்துவர் உள்ளிட்ட குழுவினர், தமக்குகொரோனா குறித்த பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்குமாறு சுகாதாரத் துறையினரிடம் முன்வைத்த கோரிக்கையை, அந்தத் துறையினர் நிராகரித்துள்ளனர் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.
கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை உள்ளிட்ட கொரோனா தொற்றாளர்கள் அதிகமுள்ள பகுதிகளில் குறித்த மருத்துவரின் கீழான மேற்படி குழுவே கொரோனா தொற்றாளர்களைக் கண்டறியும் பிரதான பணிகளை முன்னெடுத்தி ருந்தனர்.
இந்தக் காலப்பகுதியில் அவர்கள் 97 தொற்றாளர்களைக் கண்டறியும் நடவடிக் கைகளில் பங்கேற்றுள்ளனர். தொற்றாளரை அடையாளம் காணல், அவர்களை மருத்துவமனையில் சேர்த்தல், தொற்றாளர்களுடன் பழகியவர்களைத் தனிமைப் படுத்தல், பிரதேசத்தில் பி.சி. ஆர். பரிசோதனைகளுக் காக மாதிரிகளை சேகரித்தல் உள்ளிட்ட பணிகளை இந்தக் குழுவினரே முன்னெடுத்திருந்தனர்.
இந்தநிலையில், தமக்கும் கொரோனா தொற்று உள்ளதா என்பது குறித்து உறுதி செய்துகொள்ள தமது குழுவினரை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்துமாறு மாநகர மருத்துவ அதிகாரியைக் கோரியுள்ளனர். எனினும், அவ்வாறான பரிசோதனை அவசியமற்றது எனவும், நோய் அறிகுறிகள் தென்பட்டால் மட்டும் பி.சி. ஆர். பரிசோதனைக்குட்படுத்தலாம் எனவும் அந்தக் குழுவினருக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.
இந்தநிலையில், மக்களின் பாதுகாப்புக் கருதி, தமக்கு கொரோனா உள்ளதா என்பதை உறுதி செய்யாதவரை பணிகளில் இருந்து விலகி இருக்கத் தீர்மானித்துள் ளோம் என்று அவர்கள் கூறியுள்ளனர். (கு)



# பொன்னாலைப் பாலத்தில் குடை சாய்ந்தது பேருந்து

காரைநகர், மே 1
காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம், நோக்கி வந்த அரச பேருந்து ஒன்று பொன்னாலைப் பாலத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. இந்த விபத்துச் சம்பவத்தில் பேருந்தில் பயணித்தவர்களுக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டது. சம்பவம்தொடர்பானவிசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ப)

# ஆலோசனைகளை அரசு அலட்சியப்படுத்துகிறது!

## சாடுகின்றது ஐ.தே.க.

கொழும்பு, மே 1

**அரசும் சுகாதார அமைச்சர் உள்ளிட்ட துறை சார்ந்தவர்கள் உரிய சுகாதார ஆலோசனைகளை பின்பற்றாது அவற்றை அலட்சியப்படுத்தி செயற்பட்டமையால் நாடு பாரதூரமான ஆபத்துக்கு முகங்கொடுத்துள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.**

ஐக்கிய தேசிய கட்சி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:

கொரோனா வைரஸ் விசேடமாக நாட்டின் பாதுகாப்புத் துறையினர்கள் மற்றும்பொது மக்கள் மத்தியில் தீவிரமாகப் பரவியுள்ளமை தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சி மிகுந்த அவதானம் செலுத்தியுள்ளது. இந்த மாதம் 18 ஆம் திகதி சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி, 'நாட்டினுள் கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதற்கமைய நாடளாவிய ரீதியில் ஊரடங்கு சட்டத்தை தளர்த்த முடியும்' என்றும் கூறினார். விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் இவ்வாறான கருத்தினை முன்வைத்து பத்து நாள்களுக்குள் நாட்டில் 334 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

180க்கும் அதிகமான இராணுவத்தினர் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருக்கின்றமையானது கவலைக்குரியதாகும். வைரஸ் தொற்றுக்கு முகங்கொடுப்பதோடு மக்களின் வாழ்க்கையை பாதுகாக்கும் சேவையில் ஈடுபட்டுள்ள முப்படையினரின் வாழ்க்கைக்கான பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட மோசமான வேலைத்திட்டங்கள் மற்றும் பொறுப்பற்ற செயற்திட்டங்கள் என்பவற்றால் அவர்களது வாழ்க்கை அபாய நிலைக்கு உள்ளாகியுள்ளது. பாரதூரமான பிரச்சினைகள் அனைத்துமே மிக மோசமானவையாகும்.

சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் அத்தியாவசிய சேவை என்பவற்றில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்காக பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுத்தல் மற்றும் தனியாள் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கல் என்பவற்றை அதிகரிக்க வேண்டும். இந்த மாதம் 5 ஆம் திகதி நடைபெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பி.சி.ஆர் பரிசோதனைகளை விஸ்தரிக்குமாறும் தனியாள் மருத்து உபகரணங்கள் உள்ளிட்ட ஏனைய மருத்துவ வசதிகளையும் மேம்படுத்துவதில் கவனம் செலுத்துமாறும் அரசிடம் கோரிக்கை விடுத்தார். இந்த கோரிக்கையை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட சுகாதாரத்துறை சார்ந்த அனைத்து தரப்புக்களும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தன. சுகாதார அமைச்சர் மற்றும் சில அரச தரப்பினர் இது போன்ற கோரிக்கைகளை அலட்சியப்படுத்தியுள்ளனர்.

நோயாளர்களை இனங்காண்பதற்காக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள செயற்திட்டங்களை மேலும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதோடு சமூகத்தினுள் வைரஸ் பரவுவதையும் கட்டுப்படுத்த முடியாமல் போகும். எமது அத்தியாவசிய சேவைகள் மற்றும் விநியோக நடவடிக்கைகள் என்பவற்றில் ஈடுபடுபவர்களுக்கு உரிய பாதுகாப்பு உபகரணங்களை போதுமானளவு பெற்றுக் கொடுக்குமாறு ஐக்கிய தேசிய கட்சி மீண்டும் அரசிடம் வலியுறுத்துகின்றது. நாட்டு மக்களின் வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கான சேவையில் ஈடுபட்டுள்ளோர் மற்றும் வீட்டினுள்ளிருக்கும் மக்களுக்காக அரசு பொறுப்புடன் செயற்பட வேண்டும். அதற்காக சுகாதார ஆலோசனைகளுக்கு அமைய அரசாங்கம் ஆழமாகச் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம்-என்றுள்ளது. (ப)

# விபத்தில் சிக்கி நால்வர் காயம்

## சாவகச்சேரியில் சம்பவம்

சாவகச்சேரி, மே 1

சாவகச்சேரி. நுணாவில் மேற்கு ஏ9 வீதியில் நேற்று இரு மோட்டார் சைக்கிள்களும், சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் அவற்றில் பயணித்த மூன்று பெண்கள் உட்பட நால்வர் காயமடைந்தனர். இவர்களில் இரு பெண்கள் மேலதிக சிசிச்சைக்காக யாழ்ப்பாணம், போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண் ஒருவருக்கு உதவி புரிவதற்கென பெண் ஒருவரை பரந்தனிலிருந்து மோட்டார் சைக்கிளில் அழைத்து வந்தபோது நுணாவில் மேற்கில் சாலையின் குறுக்கே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி இழுபட்டு, வீதியோரத்தில் சென்ற சைக்கிளுடன் மோதியது என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் பரந்தனிலிருந்து அழைத்து வரப்பட்ட திலகராசா மதுமிதா (வயது-22), மிருசுவில் விடத்தற்பளையைச் சேர்ந்த சசிதரன் மயூரா (வயது -32) ஆகியோர் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சைக்கிளில் பயணித்த மறவன்புலவு மேற்கைச் சேர்ந்த பிரேம்நாதன் அருளானந்தராணி (வயது - 46), சாவகச்சேரி டச்சு வீதியைச் சேர்ந்த வரதலிங்கம் சதீஸ்குமார் (வயது-22) ஆகியோர் சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். (ப -9)

# தண்ணீர், மின் கட்டணங்களை குறைக்கவும்

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, மே 1

தண்ணீர் மற்றும் மின் கட்டணங்களை அறவிடும்போது பொதுமக்களுக்கு சலுகை பெற்றுக் கொடுக்கும் வகையில் குறைந்தளவிலான கட்டணத்தை அறவிடுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் பரவியுள்ள கொரோனா வைரஸ் மக்களின் வருமானத்தில் பெரு வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தோட்டத் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் நாளாந்தம் ஊதியம் பெறுபவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இன்று அவர்கள் உணவை பெறுவதற்கே பெரும் போராட்டம் நடத்த வேண்டியுள்ளது. அவர்களின் கடன்சுமைகளும் அதிகரித்துள்ளன. வீட்டு வாடகையும் செலுத்த வேண்டியுள்ளது.

இந்தநிலையில் தண்ணீர் மற்றும் மின் கட்டணங்களைச் செலுத்துவதில் பெரும் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இந்தக் கட்டணங்களை அரைவாசியாக அறவிடுவதுடன், இரு மாதங்களின் கட்டணங்களையும் சேர்த்து அறவிடாமல் தனித்தனியாக அறவிடவேண்டும்.

சேவை வரி உட்பட அனைத்து வரிகளையும் கட்டணப்பட்டியலிலிருந்து நீக்க வேண்டும். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோர் கவனம் செலுத்த வேண்டும்- என்றார். (த)



# ஹோமாகம மருத்துவமனையில் கொரோனா சிகிச்சைக்கு திட்டம்

கொழும்பு, மே 1

ஹோமாகம மருத்துவமனையிலும், கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவரை கொரோனா தொற்றாளர்கள் என இனங்காணப்பட்டவர்கள், மருத்துவமனையிலும் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கு அதற்கான சிகிச்சை யளிப்பப்பட்டுள்ளது. அவர்களில் இதுவரை எந்தவொரு கொரோனா தொற்றாளரும் தீவிர சிகிச்சை பிரிவிற்குள் அனுமதிக்கப்படவில்லை.

எனினும் பொல்பெத்திகம பகுதியில் வசிக்கும் 70 வயதுடைய பெண் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவரின் உடல் நிலை சாதாரண நிலையில் இல்லை என மருத்துவர்கள் தெரிவித்தனர். (ப)

# உருவெடுக்கின்றது டெங்கு மக்களே மிக அவதானம்!

## சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை

சாவகச்சேரி மே 1

கொரோனா தொற்று இலங்கையை ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கும் நிலையில், டெங்குவின் தாக்கமும், பரவலடைய ஆரம்பித்துள்ளது. யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குநோய் உருவெடுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் பெய்த மழையை அடுத்து தென்மராட்சி பிரதேசத்தில் டெங்குவின் தாக்கம் அதிகரித்து உள்ளதென சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.



இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்கள்;

கொடிகாம் மற்றும் நாவற்குழி போன்ற பிரதேசங்களில் டெங்குவினால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். பொதுமக்கள் தமது வீடுகளில் காணப்படும் நீர்தேங்கும் குளிர்சாதனப் பெட்டிகள், கூரைகளில் பொருத்தப்பட்ட நீர்க்குழாய்கள், மலகூடக்குழிகளில் பொருத்தப்பட்டுள்ள குழாய்கள், கால்நடைகளுக்கு நீர் வைக்கும் பாத்திரங்கள், மதில்களில் வைக்கப்பட்டுள்ள நீர் ஏந்து பாத்திரங்கள் போன்றவற்றை டெங்கு நுளம்பு தங்காத வகையில் துப்பரவாக வைத்திருக்கவும், டெங்குப் பரிசோதனை உதவியாளர்கள் மற்றும், மலேரியா தடுப்பு பிரிவினர் கூட்டாக பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். வீடுகளில், டெங்குக் குடம்பிகள் காணப்படும் பட்சத்தில் வீட்டின் உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும், குடியிருப்புகள் மற்றும் காணிகளில் காணப்படும் உக்காத பொருள்களை குப்பை அகற்றும் வாகனங்கள் வரும் பிரதான வீதிகளில் வைக்குமாறும் பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் - என்றனர். (ப-9)

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

**யாழ்ப்பாணம், மே.1**

**கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் பெறபேறுகள் கடந்த திங்கட்கிழமை வெளியானது. அதன் அடிப்ப டையில் தற்போது கிடைக்கப் பெற்ற பாடசாலைகளின் பெறுபேறுகள்:**

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

### தமிழ் மூலம் 9ஏ

கே.அபினாஸ், கே.கீர்த்திகன், ரி.குகசாந், பி.நதீசன், ஜி.விபுசன், வி.கபிசன், எஸ்.ஆகேசன், எஸ்.சினேகன், எஸ்.சுலக்சன், எஸ்.ஜனகராஜ், சி.சாருஜன், ஏ.வித்தியாசாகர்.

### ஆங்கிலம் மூலம் 9ஏ

சு.அபிராம், ஏஸ்.அக்ஸஜன், எஸ்.அபிஷேகன், டி.பிரசன்னன். கே.சுலக்சன், ரி.திலக்சன், ரி.அமலன், எஸ்.கோபிராம், கே.கீர்த்தனன், எஸ்.கேசிகன், பி.தீபக், பி.யுதிஸ்திரன்.

### தமிழ் மூலம் 8ஏ

ஏஸ்.றிசிகேஸ், ரி.தனுகரன், ஆர்.தனுசன், ரி.அபிராம், எல்.பி.அபிஷேக், ஆர்.மகீபன், எம்.சுலக்சன், ஏ.தேனுஜன், கே.திவசவன், ஏம்.வர்ணன், கே.ஹரீஸன், என்.கோபிதன் ,எஸ்.பிரணவன், டி.பிரசாந்தன், ரி.திலக்சன், யூ.வதுர்சன்.

### ஆங்கிலம் மூலம் 8ஏ

ஆர்.ஹர்சன், ஏம்.பிரசன், ரி.ராகவன், எஸ்.ரகுராமன், பி.தனுராஜ், எஸ்.துவாகரன், என்.விபுஷனன், கே.அனுஷாகர், ஏ.ஆருரன், ரி.கோபிசாந், வை.ஜனுசாந், சி.பிரணவன் ,பி.விசாகிதன்.

### தமிழ் மூலம் 7ஏ

ஜே.கலாவர்த்தனன், ஏஸ்.ஆதவன், ஜி.அருணோதயன், எஸ்.செல்வகஜன் ,ஏ.மோகன்ராஜ் ,ஜே.செஜோனடியஸ், ரி.தருண் ,என்.அபிஷன், ஜே.ஆர்த்திகன், வி.ஜெனிசன், எஸ்.பர்வின், வி.கிருஷ்ணபாலன், எஸ்.ராகவன், கே.தர்ஷன்.

### ஆங்கிலம் மூலம் 7ஏ

ஆர்.அபிலாஷ், கே.அரவிந், ஆர்.கிருஷ்ணராம், பி.மிருதுன்ஜன், வி.சேந்தன், கே.சரணியன், எஸ்.துவாரகன், எஸ்.ஆதித்தன், என்.அரவிந்தன், எஸ்.ஆதித்தன், எஸ்.பரத்கிருஷ்ணா, எஸ்.ரமணன்.

## பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை

கு.கிருசன் -8ஏபி, சா. வாகீசன் -7ஏபிசி, உ. சினேகா -5ஏபி3சி, அ.ரூபின் அனிஸ்ரா - 4ஏ2பி3சி, ஜெ.மேரிசுபோஜினி -3ஏ 3பிசி 2எஸ், ப. பவித் -2ஏ4பி3சி, ர. கிருசாந்தன் -2ஏ 2பி 5சி.

## கண்டாவளை மகா வித்தியாலயம்

வி.டிலக்சன் -9ஏ, ர.குவேனியன் -6ஏபி2சி, ர.குகனியன் - 4ஏ 4பிஎஸ், ஜெ.பகிசன் -3ஏபி3சி3எஸ், பா.பிரமிலன்- 2பி5சி2எஸ், த.சயந்தன் -7சி, சி.பிரிந்தா - ஏ3பி2சிஎஸ், க.தாரணி -3சி3எஸ், சி.அபிராமி -6சிஎஸ்.

## கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்

ச.நிசானி -2ஏ3பி3சிஎஸ், செ.காஞ்சனா -3பி3சி3எஸ், சி.தினேசா -பி6சி2எஸ், இ.மதுசா -3பி2சி3எஸ்.

## கொக்குவில் இந்துக் கல்லூரி

கே.லக்ஷ்ன் -9ஏ, கே.பானுஜா-9ஏ, எஸ்.கிருசாலினி 9ஏ, வை.சரண்யா-9ஏ, கே.ஜனார்த்தனி -9ஏ, கே.லக்ஷ்ன் -8ஏபி, வி.மதுசாந் -8ஏபி, என்.தருண் -8ஏபி, இ.திலக்ஷ்ன் -8ஏபி, எஸ்.விஸ்ணுஜன் -8ஏபி, எ.கம்சானந்தி -8ஏபி, எ.கௌதமன்- 8ஏசி, எஸ்.வேணுகோபாலன்-8ஏசி, எஸ்.சுபனுஜா-8ஏசி, எஸ்.அபிராம்-7ஏ2பி, ரி.கிருத்திஜன் -7ஏ2பி, என்.ரோஜிகன்-7ஏ2பி, ஜி.தனுசன் -7ஏ2பி, ரி.தனுசிகன் -7ஏ2பி, எல்.யஸ்மிதா -7ஏ2பி, கே.யக்ஷ்னா 7ஏ2பி, எஸ்.கேசிகா-7ஏ2பி, கே.கோபிகா -7ஏ2பி, எஸ்.நிலுக்சி- 7ஏ2பி, வி.அபீசன் -7ஏபிசி, கே.மதுஜா -7ஏபிசி, ஐ.யன்சிகா-7ஏபிஎஸ், கே.கபில்குமார் -6ஏ2பிசி,என்.தணிகச்செல்வன் -6ஏ2பிசி, வி.ஜென்சிகா-6ஏ2பிசி , கே.திரிஷா-6ஏ2பிசி, எ.விம்சிகா -6ஏ2பிசி, ஆர்.மனுகீதசர்மா -6ஏபி2சி, கே.சோபிதா6-ஏபி2சி, எஸ்.கௌதமன் -6ஏபிசிஎஸ், ரி.கவிசன் -6ஏபிசி, என்.கிருஸ்திகா -5ஏ4பி, கே.தேனுசா-5ஏ4பி, ஜே.ஜெருசன் -5ஏ3பிசி, என்.கீர்த்தனன் -5ஏ3பிசி, ஏ.சனாதனன் -5ஏ3பிசி, ரி.கபிலா -5ஏ3பிசி, எஸ்.சங்கீதா-5ஏ3பிசி, என்.அகநிலா -5ஏ3பிசி, ஆர்.அபிசாயினி -5ஏ3பிசி, ஆர்.பபிசிகன் -5ஏ3பிசி, எம்.சேந்தன் -5ஏ2பி2சி, விபிரியதர்சனா -5ஏ2பி2சி,, கே.வனுஜன் -5ஏ2பி2சி,, கே.பிரசாந்தி -5ஏ2பி2சி, கே.கோபிசாந் -5ஏ2பிசிஎஸ், எஸ்.சுஜிதரன் -5ஏ2பிசிஎஸ், எம்.அபிசா -5ஏ2பிசிஎஸ், வி.கேதிசன் -5ஏ2பிசி, எம்.தீபிகன் -5ஏ2பிசி, எம்.தினுஷா -5ஏபிசி2எஸ்.

## அத்தியார் இந்துக் கல்லூரி

சி.காவியன் -9ஏ, நி.சதுர்ஜிகா -9ஏ, ஶ்ரீ.சாருஜன் -8ஏபி, மு.கோலப்பிரியன் -6ஏ3பி, செ.செலஸ் ரீனா -6ஏபி2சி, வி.கவிதரன் -5ஏபி3சி, தி.பிரதீபன் -5ஏ2பிசிஎஸ்,பு.தர்சன் -4ஏ3பிசிஎஸ், தெ.ஜெயராம் -3ஏ4பி2சி, கா.சுதர்சினி -3ஏ4பி2எஸ், கி.அபிநயா -3ஏபி2சி3எஸ், ச.மினோஜிகா -2ஏ5பிசிஎஸ், ஞா.பதுசா -2ஏபி4சி2எஸ், கோ.அபிராம்- 2ஏ3பி2சிஎஸ், ஜெ.கானுஜா- 2ஏ3பிசி2எஸ், இ.சுசிதா -2ஏபி4சிஎஸ், கா.சர்வினா -ஏபி3சி4எஸ், ர.டெலக்ஷ்னா - ஏ5பி3சி, ஶ்ரீ.சாருஜன் -ஏ2பி4சி2எஸ், பி.பகீரதன் -ஏபி6சி, கு.ஜிதுசன் -ஏபி6சி, பெ.சுஜாத்தா -ஏ3சி2எஸ், ப.நர்மதன் -3பி4சி2எஸ், செ.சம்சா- 3பி4சி2எஸ், ப.அனுசன்- 2பி5சி2எஸ், சி.நிறூயன் -2பி5சி2எஸ்,யோ.திலக்ஷ்ன் -2பி4சி3எஸ், வி.விதுசன் -2பி3சி3எஸ், இ.ஆருரன்- 2பி4சி2எஸ், இ.லக்ஷ்ன்- 2பி5சிஎஸ்.

## யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

### தமிழ் மூலம் 9ஏ

மோ.இந்து , சி.ஜோதினி , ஜெ.கலாநதி, க.பிருதுவி , ற.சோபிகா , ட. ஹரிப்பிரியா , தி.ஜனனி , சு.நிதர்சா , க.ஷஜனி , க.சிவராஜினி , சி.கீர்த்திகா , வி.ஹாவியா ,எஸ்.விஷ்னுகா

### ஆங்கிலம் மூலம் 9ஏ

சு.அபிரா , பி.அஜானா, எஸ். ஹம்சிகா , ஆர்.நிஷானி , க.தர்னியா , பி.ரிலுஷிகா , பி.விபுஷா , எஸ்.விதுஷிகா

### தமிழ் மூலம்

சி.கோபினி-8ஏபி, எஸ்.ஆரபி -8ஏபி, ஏ.அபிலாஷ் - 8ஏபி,என்.ஷாம்பவி- 8ஏபி, ஏ.அனித்தா -8ஏபி, பி.ஆர்த்திகா- 7ஏ2பி, கே.கஜித்தா -7ஏபிசி ,வி.றாஜவர்த்தினி-7ஏபிசி, கே.கலையரசி -7ஏபிசி, பா.சசிக்கா -7ஏபிசி, கே.சோபியா -6ஏ2பிசி, ஐ.ஷங்கனி -.6ஏபி2சி. , என்.சுதான்சலி -5ஏ3பிசி, ஜே.பிரியங்கா- 5ஏ3பிசி, அபிஷா-5ஏ2பி2சி, ரி.லக்சிகா - 5ஏ2பி2சி, எஸ்.தர்ஷாயினி -5ஏ2பி2சி, கே.கனிக்கா -5ஏ2பிசிஎஸ், எஸ். திலக்சனா - 5ஏ2பிசிஎஸ், கே.கஸ்தூரி- 5ஏபி3சி

### ஆங்கிலம் மூலம்

எஸ்.லதுசினி - 8ஏபி, எல் .லெலின்சி -8ஏபி, எம்.மதுஷா- 8ஏபி, பி.மதுஷா -8ஏபி, என் .பிரியங்கா -8ஏபி, எஸ். வைஷ்ணவி -8ஏபி, றூ.ஷாலினி - 7ஏபிசி, வி.வைதேகி -7ஏபிசி,எம்.சர்மிகா-6ஏ3பி ஏ.அபினயா -6ஏபிசி, ஏ.அனற் 6ஏபிசி, கே.நிஷானி 6ஏபிசி, எம்.சாருகா - 5ஏபி3சி .

(க-422,222,159)







நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு - மாங்குளம் பகுதி வாழ் 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)



கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் மட்டக்களப்பு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் அமைப்பு ஆகியன இணைந்து கொக்கட்டிச்சோலை உட்பட்ட மட்டக்களப்பின் பல பகுதிகளிலும் உள்ள வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்களை அண்மையில் வழங்கினர். (ஐ-150)

# மட்டக்களப்பு போதனாவிலும் பி.சி.ஆர் பரிசோதனை அலகு



மட்டக்களப்பு, மே 1

**சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய பி.சி.ஆர் பரிசோதனை நிலையம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி. கலாரஞ்சினி கணேசலிங்கம் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவித்ததாவது;

சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்புரைக்கமைய பி.சி.ஆர் பரிசோதனை கடந்த திங்கட்கிழமை முதல் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நடைபெற்று வருகிறது. இதுவரை 143 பேருக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் நால்வருக்கு கொரோனா நோய் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவ்வாறு உறுதிசெய்யப்பட்டவர்கள் தனிமைப்படுத்தல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். இதற்கு முன்னர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 101 நோயாளர்களில் 8பேருக்கு கொரோனா நோய் உறுதிசெய்யப்பட்டதுடன் இவர்களில் ஒருவரே இம்மாவட்டத்தைச் சேர்ந்தவர். கொரோனா பரிசோதனை நிலையமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை தெரிவு செய்யப்பட்டிருந்தினைத் தொடர்ந்து இதற்கான தனி அலகு ஸ்தாபிக்கப்பட்டு, இங்கு வரும் கொரோனா நோயாளர்களை அல்லது கொரோனா நோய்த் தொற்று ஏற்பட்டிருக்கலாமெனச் சந்தேகிக்கும் குணங்குறியுள்ளவர்களையும் இப்பிரிவிற்குள் எடுப்பதற்கு பிரத்தியேக வாயில் அமைக்கப்பட்டிருந்தது. தற்போது பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்வதனையடுத்து இரண்டாவது வகைப்படுத்தல் பிரிவு ஒன்று அவசர மற்றும் விபத்துப் பிரிவுக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் வேளைகளில் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு வருகின்ற நோயளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இந்த நோயாளர்களுக்காக சமூக இடைவெளி பேணி அமரக்கூடியவாறு மேலதிக ஆசன வசதிகள், கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கிளினிக் சிகிச்சைக்காக வருபவர்களுக்கான மருந்து விநியோகம் தபால் சேவை மூலம் வழங்கப்பட்டிருப்பதுடன் தற்போது இங்கு வருபவர்கள் இடைவெளி பேணி மருந்துகளைப் பெற்றுக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன - என்றார். (ப-150)

## போதைக்கு அடிமையானோரால் பொலிஸாருக்கும் பெரும் சிக்கல்

மன்னார், மே 1

ஜாஎல சுதுவெல்ல பிரதேசத்தில் போதைக்கு அடிமையானவர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்காக கடற்படையினருடன் ஒன்றிணைந்து செயற்பட்ட பொலிஸ் அதிகாரிகளும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தனியார் வானொலி ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா தொற்றுக்குள்ளான கடற்படையினர் பலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனினும் பொலிஸார் பொதுமக்களுடன் மிக நெருக்கமான தொடர்புகளை வைத்து கவனமான முறையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். அவர்கள் மக்களுக்காக சுகாதார மேம்பாட்டை கருத்திற் கொண்டு அர்ப்பணிப்புடன் சேவையாற்றியமையால் ஏற்பட்டமையாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுடன் ஒன்றிணைந்து சேவையாற்றிய பொலிஸ் அதிகாரிகளும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர், என்றார். (ஒ,5)

## கொரோனாவை ஒழிக்க சுதேச மருந்து தயார்!

*கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள பணிப்பாளர் தெரிவிப்பு*

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பொது மக்களைக் காப்பாற்ற சுதேசபாரம்பரிய மூலிகை மருத்துவம் மற்றும் ஆங்கில மருத்துவம் ஆகியவற்றின் கூட்டு மருந்துகளை வழங்குவதே நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதுடன் இறப்பு வீத்தையும் குறைக்க காரணமாகவுள்ளது என்பது நிரூபணமாகியுள்ளது என கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள பணிப்பாளர் திருமதி ஆர்.ஸ்ரீதர் தெரிவித்தார்.

திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள கிழக்கு மாகாண சுதேச வைத்திய திணைக்கள அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

விசேடமாக 04 வகையான குடிநீர் மற்றும் கசாய மருந்துகளைத் தயாரித்து நாம் எமது வைத்தியசாலைகள் மூலம் பொது மக்களுக்கு இலவசமாக வழங்கி வருகின்றோம். அவற்றை பயன்படுத்தி கொரோனா நோயில் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். கொரோனாவை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சில நாடுளான சீனா மற்றும் இந்தியாவின் கேரளா மற்றும் ஏனைய மாநிலங்கள் இந்தக் கூட்டு மருத்துவ முறையில் சுதேச மருத்துவத்தைக் கையாண்டு வருகின்றது. அதனடிப்படையில் இறப்பு வீதத்தையும் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். நாமும் பல மருந்துகளைத் தயாரித்து தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கி வருகின்றோம். அதாவது கபச்சுர குடிநீர் கொரோனா அறிகுறி தென்படும் போது இதனை அருந்துவதன் மூலம் சுவாசம் தொடர்பாக உள்ள பிரச்சினையை குணப்படுத்த சிறந்த நிவாரணியாக விளங்குகிறது. உடல் தேற்றி நோய் தாக்கிய பின் அதனை பயன்படுத்தினால் எதிர்ப்பு சக்தியை கொடுத்து நோய் குணமடைய வாய்ப்புள்ளது. பிராணிஜீவன் அதனை ஆவி பிடிப்பதற்காக பயன்படுத்திசுவாசபாதையைசுத்தமாக வைத்துக் கொள்ளலாம். இது எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கிறது. மேலும் மூலிகைப் புகை இதனை சாம்பிராணி போல வீடுகளில் பயன்படுத்தினால் இயற்கை தொற்றுநீக்கியாக பயன்படுத்த முடிகிறது. இவற்றை எமது வைத்தியசாலைகளில்பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறான மருந்து விநியோகத்தை மாவட்ட வைத்திய அதிகாரி மற்றும் பிரதேச வைத்திய அதிகாரிகளுடன் இணைந்தே விநியோகித்து வருகின்றோம். இது வரை 1000 பேருக்கு மேல் இம் மருந்துகள் விநியோகிக்கப்பட்டுள்ளன - என்றார். (ப-40)

## புத்தளத்திலுள்ள மன்னார் மக்களுக்கும் நிவாரணம்

*மன். மாவட்டச் செயலர் ஏற்பாடு*

மன்னார், மே 1

புத்தளத்தில் வாழும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த வாக்காளர்களுக்கு நிவாரணம் மற்றும் இதர கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கும் வகையில், அவர்களின் விவரங்கள் மற்றும் தகவல்களை உடன் அனுப்பி வைக்குமாறு மன்னார் மாவட்டச் செயலர் கோரியுள்ளார்.

மன்னார் நகரம், முசலி, மாந்தை மேற்கு, நானாட்டான் ஆகிய பிரதேச செயலாளர்களுக்கு அவர் இது தொடர்பில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

புத்தளத்தில் வாழும் இந்தக் குடும்பங்கள் மன்னாரிலோ, அல்லது புத்தளத்திலோ எந்தவிதமான உதவிகளும் பெறாமல் மிகவும் கஷ்டப்படுவதாகவும், கொரோனா அச்ச சூழ்நிலை காரணமாக வாழ்வாதாரங்களை இழந்துள்ளதோடு, தொடர்ந்தும் புத்தளம் மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்டு வரும் ஊரடங்கால் அவர்களின் அன்றாட வாழ்க்கை மிகவும் கஷ்டத்தில் இருப்பதாகவும் சுட்டிக்காட்டி, ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்சவுக்கு மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் முஜாஹிர் கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

இந்த விடயம் தொடர்பில், மன்னார் மாவட்டச் செயலரிடமும், தவிசாளர் முஜாஹிர் வேண்டுகோள் ஒன்றை ஏற்கனவே விடுத்திருந்தார். மாவட்டச் செயலர் இந்தக் கோரிக்கை தொடர்பில், தாம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி செயலணியின் தலைவர், புத்தளம் மாவட்டச் செயலர் மற்றும் மன்னார் பிரதேச சபை தவிசாளர் முஜாஹிர் ஆகியோருக்கும் தெரியப்படுத்தியுள்ளார். (ப)

## இலங்கையில் தொழிலின்மை 0.4 சதவீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு, மே 1

இலங்கையில் தொழிலின்மை வீதம் 4.8 வீதமாக அதிகரித்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கியின் 2019ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு 4.4 வீதமாக இருந்த தொழிலின்மை வீதம், 0.4 வீத அதிகரிப்புடன் 4.8 வீதம் என்ற கட்டத்துக்கு வந்துள்ளது. 2018 இல் ஆண்கள் மற்றும் பெண்கள் மத்தியிலான தொழில் இன்மை வீதம் 3, 7.1 ஆக இருந்த நிலையில் 2019 ஆம் ஆண்டுக்கான தரவுகளின் அடிப்படையில் அது 3.3, 7.4 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கையில் தற்போது வேளாண்மை துறையில் 25.3 வீதமானோரும், சேவைகள் துறையில் 47.1 வீதமானோரும், கைத்தொழில் துறையில் 27.6 வீதமானோரும் தொழில் புரிகின்றனர்.

அதேவேளை, 2 லட்சத்து 3 ஆயிரத்து 186 பேர் கடந்த வருடம் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புகளுக்காகச் சென்றுள்ளனர். இவர்களில் 61 ஆயிரத்து 596 பேர் வீட்டுப் பணிப்பெண்களாக சென்றுள்ளனர். (ஒ,5,44)

## 130 கிலோமீற்றர் தூரத்திலுள்ள வீட்டுக்கு நடந்தேசென்ற பெண்

கொழும்பு, மே 1

கொழும்பில் வசித்துவந்த 58 வயதுடைய பெண் ஒருவர் பொகவந்தலாவை - டியன்சின் தோட்டத்துக்கு நடந்தே சென்ற சம்பவம் பதிவாகியுள்ளது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் மாவட்ட ரீதியிலான போக்குவரத்தும் முடக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கொழும்பு - நாரஹென்பிட்டியில் வேலை செய்து வந்த 58 வயதுடைய ராணியம்மா என்ற பெண் தனது சொந்த ஊருக்கு நடந்தே சென்றுள்ளார்.

குறித்த பெண் 4 நாள்கள் நடைபயணமாக 130 கிலோமீற்றருக்கும் அதிக தூரத்தை நடந்துசென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பெண் சோர்வடைந்துள்ளார் என்றும் அவர் தனது வீட்டில் தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளார் எனவும் பொகவந்தலாவ பொது சுகாதார பரிசோதகர் கே. ஜயகணேஸ் தெரிவித்துள்ளார். (கு)

# ஆட்சியைக் கவிழ்ப்பதற்காகவா சபையை கூட்டக்கேட்கின்றோம்?

## ஐ.தே.க. விளக்கம்



**கொழும்பு, மே 1**

**ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக அல்ல, கொரோனாவை ஒழிக்கும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காகவே நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு வலியுறுத்திவருகின்றோம் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் தற்போது 'சிஸ்டம்' மாறியுள்ளது. மருத்துவர்களிடமிருந்து பெறவேண்டிய ஆலோசனைகளை இராணுவத்திடமிருந்தும், உயர்நீதிமன்றத்திடம் இருந்து பெறவேண்டிய ஆசோசனைகளை தேரர்களிடமும் பெறப்படுகின்றது.
அரசுக்கு சார்பான சில தேரர்களை அழைத்து, நாடாளுமன்றத்தை கூட்டவேண்டியதில்லை என்ற அறிவிப்பு ஜனாதிபதி தரப்பில் இருந்து விடுக்கப்படுகின்றது. ஆனால், மகாநாயக்க தேரர்களின் நிலைப்பாடு அதுவல்ல. அரசமைப்பின் பிரகாரம் செயற்படுமாறே ஆலோசனை வழங்கியுள்ளனர்.
நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் தேர்தலை நடத்தி புதிய நாடாளுமன்றத்தைக் கூட்டமுடியாவிட்டால், கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கூட்டவேண்டும் என அரசமைப்பில் கூறப்பட்டுள்ளது. எனவே, ஜனாதிபதி இதனை செய்வதற்கு முன்வர வேண்டும்.
அதேவேளை, அரசின் பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாகவே கடற்படையினருக்கு கொரோனா பரவியுள்ளது. பொது சுகாதார அதிகாரிகள், போராட்டம் நடத்தியே தமக்கான பாதுகாப்பு அங்கிகளை பெற்றுக்கொண்டனர். அதனை வழங்குமாறு படையினருக்கு போராட்டம் நடத்த முடியாது.
கட்டளை விடுக்கப்பட்டால் களத்தில் இறங்கி பணியாற்ற வேண்டும். எனவே, படையினருக்கும், பொலிஸாருக்கும் தேவையான சுகாதார பாதுகாப்பு பொறிமுறையை வழங்கவேண்டியது அரசின் பொறுப்பாக இருந்தது. அந்த பொறுப்பு நிறைவேற்றப்படவில்லை.
எமது நாட்டில் சுகாதார அமைச்சுப் பதவியை வகிப்பவர் துறைசார் நிபுணர்அல்ல, ஆளுங்கட்சியில்மருத்துவத்துறையுடன் தொடர்புடையவர்கள் இருக்கின்றனர். அவர்கள் இணைத்துக்கொள்ளப்படவேண்டும்.
இவை உட்பட மேலும் பல விடயங்களை சுட்டிக்காட்டி, கொரோனா ஒழிப்புக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குவதற்காகவே நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு கோருகின்றோம். மாறாக ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக அல்ல, - என்றார். (ஒ,5,44)

# கைத்தொழில் பேட்டைக்கு வந்தோர் தனிமைப்படுத்தலில்

## *முல்லைத்தீவில் சம்பவம்*

முல்லைத்தீவு, மே 1
புதுக்குடியிருப்பில் இயங்கும் கைத்தொழில் பேட்டையில் பணி புரிவதற்காக கண்டி, அம்பாறை மாவட்டங்களில் இருந்து பொதுச் சுகாதார பரிசோதகரின் அனுமதியும் இன்றி வந்த 9 பேர் அவர்கள் தங்கியுள்ள வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.
புதுக்குடியிருப்பு சிவநகர் பகுதியில் வாடகை வீட்டில் கடந்த மார்ச் மாதத்துக்கு முன்னர் இருந்து வாடகைக்கு வசித்து வந்துள்ளனர்.
ஊரடங்கு சட்டம் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் அவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்பியிருந்தனர். ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும் இந்தக் காலப் பகுதியில் வேலைக்காக மீண்டும் வந்துள்ளனர். இதற்கு அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். அங்கு வந்த பொலிஸார் மக்களை விரட்டியுள்ளனர்.
இந்த நிலையில் நேற்றுமுன்தினம் பொதுமக்கள் மீண்டும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். அங்கு வந்த பொலிஸார், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மற்றுமொருவர் மீதும் தாக்குதல் நடத்தினர். அவர்களை பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர். ஆனால் பொதுமக்கள் விடாப்பிடியாக அவர்களை தனிமைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினர். இதனையடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அந்த வீட்டுக்கு தனிமைப்படுத்தல் தொடர்பான அறிவுறுத்தலை ஒட்டிவிட்டுச் சென்றனர். (ஒ,5,19)

# எதிரணிக் கட்சிகள் அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்துகிறதாம்

## *புலம்புகின்றார் முன்னாள் எம்.பி. வாசுதேவ*



கொழும்பு, மே 1
அரசியல் ரீதியாகவும், அரசமைப்புரீதியாகவும்நெருக்கடியை ஏற்படுத்த எதிர்த்தரப்பினர் முயற்சிக்கின்றார்கள். பெரிய சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்த்தரப்பினர் செயற்படுவது வெறுக்கத்தக்கது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.
கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துக்கொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனா வைரஸ் உலகளாவிய ரீதியில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. எந்த நாட்டு எதிர்க் கட்சியும் அரசுக்கு எதிராகச் செயற்படவில்லை. அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து சவால்களை எதிர்கொள்கின்றார்கள்.
ஆனால் எமது நாட்டின் எதிர்க்கட்சி முற்றிலும் மாறுபட்டதாகவுள்ளது. கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தவும், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் அரசு முழுமையாகக் கவனம் செலுத்தியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை எதிர்த்தரப்பினர் தங்களின் அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்திக் கொள்கிறார்கள்.
அரசியல், அரசமைப்பு ரீதியாகவும் நெருக்கடியை ஏற்படுத்தி மக்களை அரசுக்கு எதிராகத் தூண்டிவிடும் நிலைப்பாட்டில் இருந்து கொண்டு எதிர்த்தரப்பினர் வெறுக்கத்தக்க அரசியல் பரப்புரையை முன்னெடுக்கின்றார்கள்.
கொரோனா வைரஸ் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை மீண்டும் வழமைக்கு திரும்பும் - என்றார். (த)



# குண்டு வீச்சில் உயிரிழந்தவர்கள் நினைவாக உணவுப் பொருள்கள்

தென்மராட்சி மே 1
கடந்த 1990 ஆம் ஆண்டு எழுதுமட்டுவாழ் கிளாலி வீதியில் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் சாவடைந்த இரு பிள்ளைகளின் நினைவாக புலம்பெயர் நாட்டில் வதியும் குடும்பத்தினர் சம்பவம் நடைபெற்ற இடத்தின் சுற்றாடலில் உள்ள 94 குடும்பங்களுக்கு நேற்று தலா 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான 10 அத்தியாவசிய உலர் உணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங்கினர்.
சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளையின் வழிநடத்தலில் எழுதுமட்டுவாழ் தெற்கு பிரிவில் 46 குடும்பங்களுக்கும், கரம்பகம் பிரிவில் உள்ள 48 குடும்பங்களுக்கும் இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ப-9)

# நிவாரணத் தொகையை 15,000 ஆக்க கோரிக்கை

கொழும்பு, மே 1
கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையில் அரசு வழங்கும் 5ஆயிரம் ரூபா நிவரணத் தொகையை 10 ஆயிரம் அல்லது 15 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு அரசிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்ஜே.சி.அலவத்துவல இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.
எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
வைரஸ் பரவலை அரசு தேர்தலில் வெற்றிகொள்வதற்குப் பயன்படுத்த முயற்சிக்கின்றது. கொவிட் 19 வைரஸ் பரவல் தொடர்பில் அரசு விஷேட மருத்துவநிபுணர்களின்ஆலோசனைக்கமைய செயற்படுவதாகத் தெரியவில்லை.
தேசிய பாதுகாப்பு என்று கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசு அதனை உறுதிப்படுத்தியுள்ளதாகத் தெரியவில்லை. கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் அனைவரும் விளக்கம் பெற்றிருந்தபோதும் அரசு விளக்கத்துடன் செயற்படுவதாகத் தோன்றவில்லை.
இராணுவத்தினருக்கு வைரஸிலிருந்து பாதுகாப்பதற்கு அவசியமான பாதுகாப்பு அங்கிகளைப் பெற்றுக் கொடுக்காததால் இராணுவத்தினர் பலர் வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அவர்களைப் பாதுகாப்பது எமது பொறுப்பு- என்றார். (த)

# சந்தைப்படுத்த திண்டாடும் பூசணிக்காய் செய்கையாளர்



சாவகச்சேரி, மே 1
மட்டுவில் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட பெருமளவுபூசணிக்காய்கள் விற்பனை செய்யமுடியாமல் வீடுகளில் வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.
கொரோனா தாக்கம் காரணமாக நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கால் மக்கள் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர். அன்றாடக் கூலித் தொழிலாளர்கள்முதற்கொண்டு, விவசாயிகள், வியாபாரிகள் எனப் பலரும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர்.
இவ்வாறே சாவகச்சேரியிலும், மட்டுவில் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளும், பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர். உள்ளூர் பூசணிக்காயுடன் ஆயிரக்கணக்கான கிலோ நிறையுடைய தம் புள்ளபூசணிக்காய்களும் இவ்வாறு சந்தைப்படுத்த முடியாமல் உள்ளன என்று அந்த விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (ப-9)

# உரிமைக்கான பிரகடனத்தை மே முதல் நாளில் செய்வோம்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அறைகூவல்



யாழ்ப்பாணம், மே 1

வர்க்க ஒடுக்குமுறைக்கு எதிரான கோபக்குரலையே மே முதலாம் நாள் வருடா வருடம் ஒலித்து வருகின்றது. உலகம் முழுவதும் உள்ள உழைக்கும் வர்க்கத்துடனும், உரிமைகளுக்காகப் போராடும் மக்களுடனும் எமது கரங்கள் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. எங்கள் உணர்வுகள் அவர்களின் உணர்வுகளுடன் சங்கமித்துள்ளன. உரிமைகள் பெறும்வரை எமது போராட்டம் தொடரும் என்பதை மீண்டும் ஒரு முறை இந்த மே நாளில் பிரகடனம் செய்கின்றோம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

மே தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:

1886ஆம் ஆண்டு மே முதலாம் நாள் அமெரிக்காவின் பெரும் தொழில் நகரங்களில் ஒன்றான சிக்காக்கோவின் தொழிற்சாலை இயந்திரங்கள் தங்கள் இரைச்சலை நிறுத்திக் கொண்டன. புகை போக்கிகள் கக்கும் புகைகள் காணாமற் போயின.

நகரின் ஒரு தொழிற்சாலையிலிருந்து புறப்பட்ட பேரணியின் எட்டு மணி நேரம் வேலை என்ற கோரிக்கையுடனான கோசங்கள் வானைப் பிளக்கின்றன. நகர வீதிகளால் புறப்பட்ட ஊர்வலம் செல்லும் வழியெங்கும் அமைந்திருந்த தொழிற்சாலைகளின் தொழிலாளர்களையும் அள்ளிக் கொண்டு பேரலையாகப் புறப்பட்டு நகரின் மத்தியை நோக்கி நகர்கிறது. உரிமை கோரி வேலை நிறுத்தம் செய்த 35 ஆயிரம் தொழிலாளர்களின் குரலாக ஓங்கி ஒலிக்கிறது பேரணி.

ஊர்வலம் நகர மத்தியை அடைந்த போது முதலாளிகளின் கூலிப் படையினரும், குண்டர்களும் இணைந்து தொழிலாளர் மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றனர். நான்கு தொழிலாளர்கள் உயிரிழந்து வீழ்கின்றனர்.

வீழ்ந்த தொழிலாளர்களின் குருதியில் கொண்டு சென்ற கொடிகளைத் தோய்த்து செங்கொடிகளாக்கி ஏனையோர் ஊர்வலத்தைத் தொடர்கின்றனர்.

இந்தப் படுகொலைகளைக் கண்டித்து 4ஆம் நாள் 'கமர்கட்' சதுக்கத்தில் கண்டனக் கூட்டம் ஆரம்பமாகவிருந்த சமயத்தில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பல பொதுமக்கள் இறக்கின்றனர். பல தொழிற்சங்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு 7 பேர் தூக்கிலிடப்படுகின்றனர். பலருக்கு நீண்ட காலச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அளப்பரிய ஒடுக்குமுறைகள் மத்தியிலும் எட்டு மணி நேர வேலை என்ற கோரிக்கை உலக நகரங்கள் எங்கும் விரிவடைந்து வெற்றி பெறுகிறது.

1890இல் பாரிசில் இடம்பெற்ற பொதுவுடைமைக் கட்சியின் இரண்டாவது மே நாள் தொழிலாளர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அன்றிலிருந்து மே முதல்நாள் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் உரிமைப் பிரகடனத் தினமாக உலகெங்கிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

வர்க்க ஒழுங்கு முறைக்கெதிரான கோபக்குரலையே மே முதலாம் நாள் வருடா வருடம் ஒலித்து வருகிறது.

இன்று உலகம் முழுவதுமே வர்க்க ஒடுக்குமுறை என்பது இன ஒடுக்குமுறையின் குருதி குடிக்கும் ஒரு வடிவமாக வெளிப்படுகின்றது. அவ்வேவேளையில் ஒடுக்கப்படும் எமது தேசிய இனத்தின் உரிமைக் குரலை ஒவ்வொரு வருடமும் செங்கொடிகளை ஏந்தி ஒலித்து வந்தோம்.

ஆனால் இந்த ஆண்டில் உயிர் குடிக்கும் கொரோனா கிருமிகளால் எங்கள் முகங்கள் கவசங்களால் மூடப்பட்டன. எங்கள் உரிமைக் குரல்கள் வெளியே வரமுடியாது நெஞ்சுக்குள்ளேயே கொந்தளித்தன. ஒன்று கூடினால் ஆபத்து என்ற நிலையில் எங்கள் ஊர்வலங்கள் கூட அடுத்த வருடத்துக்காகக் காத்துக் கிடக்கின்றன.

எவ்வளவு தடைகள் இருந்தாலும் உலகம் முழுவதுமுள்ள உழைக்கும் வர்க்கத்துடனும் உரிமைகளுக்காகப் போராடும் மக்களுடனும் எங்கள் கரங்கள் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. எங்கள் உணர்வுகள் அவர்களின் உணர்வுகளுடன் சங்கமித்துள்ளன. உரிமைகள் பெறும்வரை எமது போராட்டம் தொடரும் என்பதை மீண்டும் ஒரு முறை இம் மே நாளில் பிரகடனம் செய்கிறோம்- என்றுள்ளது. (ஏ)

# நாடாளுமன்றை மீளக்கூட்ட ஒருபோதும் அனுமதியோம்!

## அரசின் பங்காளிகள் விடாப்பிடி

கொழும்பு, மே 1

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக்கூட்ட நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். விரைவில் பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடு. இவ்வாறு கோத்தாபய மஹிந்த தலைமையிலான அரசின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதற்கே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார். இதன்போது பழைய நாடாளுமன்றத்தை மீளக்கூட்டும் தீர்மானத்தைப் பிரதமர் எடுக்கவே மாட்டார். அந்தத் தீர்மானத்தை எடுக்குமாறு எவர் வலியுறுத்தினாலும் அதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கவே மாட்டோம். இதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். கொரோனா வைரஸ் நோய்க்கு உடன் முடிவு கட்டப்பட்டு விரைவில் பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடு. கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக்கூட்டுவதால் எந்தவிதப் பயனும் இல்லை. பெரும்பான்மைப் பலம் இல்லாத பழைய நாடாளுமன்றத்தைக் கூட்டினால் அது எதிர்க்கட்சிகளின் சுயலாப அரசியலுக்குத் தீனி போடுவதாகவே அமையும் - என்றனர். (ஒ,5,22)

# இலங்கை திரும்ப விரும்பும் மாணவர்களுக்கு அழைப்பு!

கொழும்பு, மே 1

இலங்கைக்கு திரும்ப நினைக்கும் மாணவர்களுக்கு சிறிலங்கன் விமான சேவை அழைப்பு விடுத்துள்ளது.

தமது சொந்த நாட்டுக்குத் திரும்ப விரும்புகின்ற இங்கிலாந்து அல்லது ஆஸ்திரேலியாவில் உள்ள இலங்கை கடவுச்சீட்டை கொண்டுள்ளவர்களுக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் சிக்கியுள்ள மாணவர்கள், தங்களை அந்தந்த நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் விரைவாகப் பதிவு செய்யுமாறு, சிறிலங்கன் விமான சேவையால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட திகதிகளில் லண்டன் மற்றும் மெல்போர்ன் நகரங்களிலிருந்து கொழும்புக்கு விசேட விமானத்தை இயக்கவுள்ளதாக தெரிவித்துள்ள சிறிலங்கன் விமான சேவை நிறுவனம், வெளிவிவகார அமைச்சின் அனுமதிக்கு அமைய, இதனை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது. (ஒ,5,22)

# யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 1

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் ஊரடங்கு தளர்த்தப்படும் வேளையில் காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரை வாகன வரி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று யாழ்ப்பாண பிரதேச செயலர் சா.சுதர்சன் அறிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையை கருத்தில் கொண்டு இந்தச் சேவையை குறிப்பிட்ட நேரத்துக்குள் மட்டுப்படுத்தியுள்ளதாகவும், ரோக்கன் ஊடாக சமூக இடைவெளி பேணப்பட்டே இது நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஒ,5,7)

# கொல்கத்தாவில் இருந்து 125 மாணவர்கள் வருகை

## தனிமைப்படுத்தலுக்கு அனுப்பிவைப்பு

கொழும்பு, மே 1

கொரோனா வைரஸ் பரவலைத் தொடர்ந்து இந்தியாவின் கொல்கத்தாவில் சிக்கியிருந்த இலங்கை மாணவர் குழுவினரை சிறிலங்கன் எயார்லைன்ஸிற்குச் சொந்தமான விசேட விமானம் ஏற்றி வந்துள்ளது.

நேற்று வியாழக்கிழமை மாலை 5.20 மணியளவில் குறித்த விமானம் இலங்கை மாணவர்கள் 125 பேருடன் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது. கொல்கத்தாவில் இருந்து இலங்கை திரும்பிய 125 மாணவர்களும் இராணுவத்தினரால் நடத்தப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு விசேட பஸ்களில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (ஒ,5,22)

# குருநாகல் நகரங்களின் கடைகள் 5 வரை பூட்டு

கொழும்பு, மே 1

குருநாகல் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் நோக்குடன், குருநாகல் உட்பட மாவட்டத்தின் பிரதான நகரங்கள் பலவற்றில் இன்று தொடக்கம் எதிர்வரும் 5 ஆம் திகதிவரை சகல வர்த்தக நிலையங்களையும் மூடுவதென்று நகரங்களின் வர்த்தக சங்கங்கள் முடிவெடுத்துள்ளன. குருநாகல், அலவ்வ, கல்கமுவ, குளியாபிட்டிய, ஹிரிபிட்டிய, கும்புக்கெட்டே ஆகிய நகரங்களின் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

குருநாகல், அலவ்வ நகரில் கொரோனா தொற்றாளர்கள் கண்டறியப்பட்ட நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. குளியாபிட்டி பகுதியில் ஹம்மலவ மற்றும் உடுபத்தாவ பிரதேசங்களில் அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களான கடற்படையினர், குருநாகல் நகரில் சஞ்சரித்துள்ளமை தெரியவந்துள்ளது. இதேவேளை, குருநாகல் நகரில் ஒசுசல தவிர ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் ஹிரிபிட்டிய, கும்புக்கெட்டே பகுதி வர்த்தக சங்கங்களும் முதலாம் திகதிவரை வர்த்தக நிலையங்களை மூடத் தீர்மானித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (து)

# கல்வி ஒளிபரப்புக்கு யாழில் ஒளிப்பதிவு

யாழ்ப்பாணம், மே 1
க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்கள் வீட்டிலிருந்தே கற்றலை மேற்கொள்ளும் வகையிலான இடர்கால கல்வி ஒளிபரப்புக்கான தயாரிப்புக்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகின்றன. மாணவர்கள் தவறாது அதன் மூலமாகக் கற்றலை மேற்கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.
வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் தேசிய கல்வி நிறுவகமும் இணைந்து ஒளிபரப்புக்கான தயாரிப்புக்களைச் செய்துவருகின்றன.
கல்வித் திணைக்கள மற்றும் ஆசிரிய வளவாளர்கள் கல்வி கற்றலைத் தொகுத்து வழங்குகின்றனர்.
வடக்கு கல்வித்திணைக்கள முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவின் நல்லூரிலுள்ள கலையகத்தில் ஒளிப்பதிவு இடம்பெறுகின்றது. இவை ரூபவாகினியின் 'ஐ' மற்றும் 'நேத்ரா' அலைவரிசைகளில் ஒளிபரப்பாகின்றன. (து)

# தேர்தலை நடத்தும் எண்ணமே இல்லை!

## கூறுகின்றார் அமைச்சர் ரமேஷ்

**கொழும்பு, மே 1**
**தற்போதைய சூழ்நிலையில் பொதுத்தேர்தலை நடத்துவது அரசின் முதன்மை நோக்கம் கிடையாது என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.
அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
தேர்தலை நடத்துவது தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கே இருக்கின்றது. வைரஸ் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாத்து நாட்டை இயல்பு நிலைமைக்குக் கொண்டு வரவேண்டும் என்பதே அரசின் தற்போதைய எதிர்பார்ப்பாகவுள்ளது.
மக்களின் ஆணையைப் பெற்ற ஜனாதிபதி இருக்கிறார். பிரதமர் தலைமையிலான அமைச்சரவை எம்முடையது. உள்ளூராட்சி சபைகளின் அதிகாரமும் எங்கள் வசமே இருக்கின்றது. எனவே, தேர்தலை நடத்துவதற்கு அரச தரப்பு அவசரப்படவில்லை. வைரஸை ஒழிக்க வேண்டும் என்பதே முதன்மை நோக்கமாக இருக்கின்றது.
எனவே சுகாதாரத் தரப்பின் ஆலோசனையின் பிரகாரம் தேர்தலுக்கான திகதியை ஆணைக்குழு தீர்மானிக்கும் என்று நாம் நம்புகின்றோம். அதற்கான அதிகாரம் அரசுக்கு இல்லை." என்றும் குறிப்பிட்டார். (த44)

# 3 மாத கால விடுமுறை கோருகின்றார் சார்ள்ஸ்?

யாழ்ப்பாணம், மே 1
வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சார்ள்ஸ் மூன்று மாத கால மருத்துவ விடுப்புக் கோரியுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் அவர் விடுப்புக்கான அனுமதியைக் கோரியுள்ளார் என்றும், இன்று முதலாம் திகதி முதல் மூன்று மாதங்களுக்கே அவர் விடுப்புக் கோரியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.
ஆளுநரின் பணிகளை ஒழுங்குபடுத்தி நிர்வாகத்தை முன்னெடுக்க வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரைக் கொண்ட குழுவை அனுமதிக்க வேண்டும் என்று ஆளுநர் தனது கடிதத்தில் கேட்டுக்குக் கொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சார்ள்ஸ் அண்மைக்காலமாக கொழும்பிலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திலிருந்தே பணிகளை முன்னெடுத்திருந்த நிலையில் இந்த விடுப்பைக் கோரியுள்ளார்.
அதேவேளை, வடக்கு ஆளுநர் 3 மாதகால விடுப்புக் கோரியுள்ளதால் வேறொரு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண பதில் ஆளுநராக மூன்று மாதங்களுக்கு நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஏ)



# உத்தியோகத்தர்களுக்கு நோய் எதிர்ப்பு மருந்து

கல்முனை,மே.1
நாட்டின் அசாதாரண நிலைமையைக் கருத்தில் கொண்டு இறக்காமம் பிரதேச செயலகத்தில் விஷேட கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்காக "இமியூன் வூஸ்ட்டர்" நோய் எதிர்ப்பு மருந்துப் பொதிகள் நேற்று வழங்கப்பட்டன.
கல்முனைப் பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளரும், நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான வைத்திய கலாநிதி எம்.ஏ.நபீல், இறக்காமம் பிரதேச செயலக உதவிச் செயலாளர் எப்.நஹீஜா முஸாபீரிடம் பொதிகளை வழங்கினார். (க)

# பெருந்தோட்ட பகுதிக்கு ரூ.5,000 இல்லை


கொழும்பு, மே 1
கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக வருமானம் கிடைக்காத மற்றும் குறைந்த வருமானம்பெறும் மக்களுக்காக அரசு அறிமுகப்படுத்திய 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெருந்தோட்ட தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அந்த கொடுப்பனவு பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று தோட்ட தொழிலாளர் மத்திய நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது. (து)

# நாடாளுமன்றத்தைக் கூட்டும் பேச்சுக்கே இடமில்லை

## எதிர்க்கட்சிகளுக்கு கோத்தாபய பதில்

கொழும்பு, மே 1
கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை எக்காரணம் கொண்டும் மீண்டும் கூட்டவே முடியாது என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.
எதிர்க்கட்சியின் பிரதான அரசியல் கட்சிகளின் தலைவர்களின் கையொப்பங்களுடன் கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கூட்டு அறிக்கைக்கு ஜனாதிபதி, தனது செயலாளர் பீ.பி. ஜயசுந்தர மூலம் ஜனாதிபதி பதில் வழங்கியுள்ளார். முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸவுக்கே இந்தக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.
கூட்டு அறிக்கையில் கையொப்பமிட்டுள்ள தரப்பினர், பொதுத்தேர்தலை நடத்துவது அவசியம் இல்லை எனக் கருதுகின்றமை புலனாகின்றது. கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தி மக்களின் வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கு அரசு அர்ப்பணிப்புடன் காணப்படும் இந்த நேரத்தில், எதிர்க்கட்சியானது ஒரு குறுகிய அரசியல் நோக்கில் ஈடுபட்டுள்ளது என ஜனாதிபதி செயலாளர் பீ.பி. ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருக்கு பீ.பி. ஜயசுந்தர எழுதியுள்ள அந்தக் கடிதம் வருமாறு:
அந்த அறிக்கையின்படி, அதில் கையெழுத்திட்ட கட்சிகள் தேர்தலை நடத்தத் தேவையில்லை எனவும், கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்து தொடர்பில் சுகாதார மற்றும் ஏனைய அரச சேவையாளர்கள், முப்படையினர், பொலிஸார் மற்றும் தனியார் பிரிவினரின் அர்ப்பணிப்பை கௌரவிக்காமல் இருப்பதாகும் என ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய நான் தெரிவிக்கின்றேன்.
நாடாளுமன்றம் அதன் ஐந்தாண்டு காலத்தின் முடிவில் அல்லது ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் சந்தர்ப்பத்தில் கலைக்கப்படும் என்று ஜனாதிபதி மேலும் வலியுறுத்தியுள்ளார். அதற்கமைய 2020, மார்ச் 02 ஆம் திகதி ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார்.
மேற்கூறிய கலைப்பு தொடர்பில் உங்களால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் கையெழுத்திட்ட அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொண்டுள்ளதன் மூலம், மேற்குறித்த கலைப்பு அறிவிப்பின் செல்லுபடியாகும் தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என உங்களுக்குத் தெரிவிக்குமாறு எனக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட முடியாது எனவும், 2020.03.02 ஆம் திகதி அதி விசேட வர்த்தமானியின் மூலம் அறிவிக்கப்பட்ட கலைப்பு அறிவிப்பின் படி, 25.04.2020 அன்று தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும், அதன் பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் 20.06.2020 ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளதை தெரிவிக்குமாறும் எனக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
மேலும் அரசமைப்பின் 70 (7) பிரிவுக்கு இணங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்பதை உங்களுக்குத் தெரிவிக்குமாறு ஜனாதிபதி எனக்கு அறிவுறுத்தியுள்ளார் - என்றுள்ளது. (ஏ-22)





# அரசமைப்பும் நாடாளுமன்றத் தேர்தலும்



■ சந்திரசேகர ஆசாத்

கடந்த 20.04.2020 அன்று இடம்பெற்ற தேர்தல் ஆணைக்குழுவின் கூட்டத்தை அடுத்து எதிர்வரும் ஜுன் மாதம் 20ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது என முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே தேர்தல் ஆணையாளர் பாதுகாப்புத் தரப்பினர், அரச அதிபர்கள், சுகாதாரப் பிரிவினர் ஏனைய நிர்வாகத் தரப்பினர் ஆகியோருடன் ஒரு விரிவான கலந்துரையாடலை நடத்திய பின்பே தேர்தல் ஆணையாளரால் இப்படி ஒரு முடிவு வெளியிடப்பட்டது.

கடந்த வருடம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய ராஜபக்ச மிகப் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்ற போதிலும் அவருக்கு நாடாளுமன்றப் பெரும்பான்மை இருக்கவில்லை. நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் முடிவடையாவிட்டாலும் ,நான்கு வருடங்கள் நிறைவடைந்த பின்பு நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தை இலங்கையின் அரசமைப்புச் சட்டம் ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளது. அவ்வகையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவினால் கடந்த மார்ச் மாதம் 2ஆம் நாள் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. அதன்படி 25.04.2020 அன்று தேர்தல் இடம்பெறுமெனவும் முதலாவது நாடாளுமன்றம் மே 2ஆம் நாளில் கூடுமெனவும் ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டது.

அவ்வகையில் வேட்புமனுக்கள் கோரப்பட்டு சகல மாவட்டங்களிலும் பல்வேறு கட்சிகளின் சார்பிலும் போட்டியிடும் வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு வேட்பாளர்களின் பட்டியல்களும் வெளியிடப்பட்டன.

இந்தநிலையில் 11.03.2020 அன்று இலங்கையில் முதல் கொரோனா நோயாளி அடையாளம் காணப்பட்டார். அடுத்தடுத்து கொழும்பு, புத்தளம், கம்பஹா, யாழ்ப்பாணம், இரத்தினபுரி உட்பட சில மாவட்டங்களில் கொரோனா நோய்த் தொற்றுக்கு ஆளானவர்கள் இனம்காணப்பட்ட நிலையில் நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் 9 மாவட்டங்களில் தொடர் ஊரடங்குச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதுடன் ஏனைய மாவட்டங்களில் குறிப்பிட்ட சில மணிநேரம் மட்டும் ஊரடங்கு தளர்த்தப்பட்டது.

எப்படியிருப்பினும் கடந்த ஒரு மாத காலமாக அரச காரியாலயங்கள், வணிக நிறுவனங்கள், போக்குவரத்து, சுயதொழில்கள் என்பன முடக்கப்பட்டதுடன் மக்களின் நடமாட்டமும் மிக இறுக்கமான முறையில் மட்டுப்படுத்தப்பட்டது.

ஒட்டுமொத்தத்தில் மக்களின் இயல்பு வாழ்வு முற்றாகவே சீர்குலைந்திருந்தது. இந்த நிலையில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஏப்ரல் 25ஆம் நாள் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த முடியாத நிலையில் கொரோனா அச்சுறுத்தல் முடிவுக்குக் கொண்டு வரப்படும் வரையில் தேர்தல் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட வேண்டுமெனப் பலராலும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

கொரோனா தொடர்பான அச்ச சூழ்நிலை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கச் செல்வார் என்றோ தேர்தல் பணியாளர்கள் கடமைகளில் ஈடுபட முன்வருவார்கள் என்றோ எதிர்பார்க்க முடியாத நிலையில் நியாயபூர்வமான ஒரு தேர்தல் நடைபெற முடியாதெனவே அரசியல் கட்சிகள் உட்படப் பல தரப்பினரும் கருதினர்.

இந்த நிலையில்தான் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பாக உயர் நீதிமன்றத்திடம் சட்ட வியாக்கியானம் கோரும்படி ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பினார். அதற்குப் பதிலனுப்பிய ஜனாதிபதியின் செயலாளர் உயர் நீதிமன்றிடம் விளக்கம் கோரும் தேவை ஜனாதிபதிக்கு இல்லையெனவும் தேர்தலை ஒத்திவைக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு இலங்கையின் அரசமைப்பின்படி உண்டு எனத் தெரிவித்திருந்தார்.

அதேவேளையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும் தான் அரசமைப்பை மீறிச் செயற்படப் போவதில்லை எனவும் மக்களின் ஜனநாயக உரிமைக்குப் பங்கம் வரப் போவதில்லை எனவும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தேர்தலைக் காலவரையறையின்றி ஒத்திவைக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு இல்லையெனவும் குறிப்பிட்ட திகதியில் ஜனாதிபதியால் தேர்தலை நடத்த முடியாவிட்டால் அரசமைப்பின் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான முதலாவது சட்டத்தின் படி இன்னொரு திகதிக்கு ஒத்திவைக்க முடியுமெனவும் தெரிவித்துள்ளார்.

கொரோனா அச்சம் முற்றாக நீங்கிய நிலையில் நாடு இயல்பு நிலைக்குத் திரும்பிய பின்னரே தேர்தல் நடத்தப்பட வேண்டுமென பல அரசியல் கட்சிகள், புத்திஜீவிகள், தேர்தல் கண்காணிப்புக்குழுவான பவ்ரல் அமைப்பு எனப் பல தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு அரசமைப்பின் அடிப்படையில் எதிர்வரும் ஜுன் மாதம் பொதுத் தேர்தல் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய சூழலில் தேர்தல் நடத்தப்படுவது பொருத்தமானதா? இல்லையா? என்ற கேள்வி எழும் போது இரு காரணங்களினூடாகப் பதில்களைத் தேட வேண்டியுள்ளது.

ஒன்று, இன்று கொரோனாப் பரவல் அதிகரித்துக் கொண்டு வரும் சூழல். மற்றது இன்றைய சூழலின் அடிப்படையில் அரச நிர்வாக விடயங்களில் இராணுவத்தினருக்கும் புலனாய்வுப் பிரிவினருக்கும் வழங்கப்பட்டுள்ள அதீத அதிகாரங்கள் கொரோனா தொற்றுக்கு ஆளான முதல் நோயாளி இனம் காணப்பட்டதிலிருந்து நாளாந்தம் நான்குக்கு உட்பட்ட அளவிலேயே நோய்த் தொற்றுக்கு உள்ளாகி வந்தனர். சில நாள்களில் அதுவும் இல்லாமலிருந்தது. ஆனால் கடந்த ஒரு வாரத்தில் கொரோனா பாதிப்புக்குள்ளானோரின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து தேர்தல் தினம் அறிவிக்கப்பட்ட 20.04.2020 இல் 303 ஆக அதிகரித்திருந்தது. அது அடுத்த நாளில் 310 ஆக உயர்ந்துவிட்டது. இதுவரை நோய்த் தொற்றுள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்டவர்கள். ஏற்கனவே பாதிப்புக்கு உள்ளானவர்களுடன் நெருங்கிப் பழகியமைக்காக தனிமைப்படுத்தல் மையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களே. ஆனால் அண்மையில் இனங்காணப்பட்டவர்கள் இவ்வட்டத்துக்கு வெளியே உள்ளவர்களாகவே காணப்படுகின்றனர். அதாவது இது நோய்ப் பரவல் இரண்டாவது கட்டத்தை எட்டிவிட்டதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. பேலியகொடவைச் சேர்ந்த ஒரு மீன்வியாபாரி கொரோனா தொற்றுக்குள்ளானமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக பேலியகொடை மீன் சந்தையில் சில்லறை விற்பனை தடை செய்யப்பட்டதுடன் பொதுமக்கள் அங்கு செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. அந்த மீன் வியாபாரியுடன் ஏராளமானோர் பழகியிருப்பார்கள் என்பதால் அங்கு பெரும் அச்சநிலை உருவாகியுள்ளது. இவ்வாறே கொழும்பு கிராண்ட்பாசில் உள்ள பல குடும்பங்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அதேவேளையில் கொழும்பு- 12 இல் உள்ள பண்டாரநாயக்க மாவத்தையில் 30 நோயாளிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். அதன் காரணமாக 212 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 10 பேர் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.



எனவே கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை நாளாந்தம் வேகமாக அதிகரித்து வரும் நிலையில் மக்கள் கட்டுப்பாடுகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. குறிப்பாக ஒன்றுகூடல்கள் தவிர்க்கப்படுவதும் வெளியே நடமாடுவதை இயன்றவரை குறைக்கவும், சமூக இடைவெளிகளைப் பின்பற்றவும் வேண்டியுள்ளது. இவற்றை அலட்சியம் செய்தால் உயிராபத்து ஏற்படுவதுடன் ஏனையோருக்கும் உயிராபத்தை ஏற்படுத்தும் நிலையும் ஏற்படலாம்.

இப்படியான நிலையில் அரசியல் கட்சிகளோ, வேட்பாளர்களோ சுதந்திரமான முறையில் தமது பரப்புரை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமா? பொதுமக்கள் உயிர் அச்சுறுத்தலைப் பொருட்படுத்தாது துணிந்து சென்று வாக்களிப்பார்களா? தேர்தல் பணிகளில் ஈடுபட பணியாளர்கள் விரும்பி வருவார்களா? எனவே இப்படியான ஒரு நெருக்கடி நிலையில் ஒரு மக்களின் ஜனநாயக உரிமைகளை வெளிப்படுத்தக் கூடிய தேர்தல் சாத்தியப்பட முடியாது.

கொரோனா பிரச்சினை ஆரம்பமாகும் முன்னரே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அரச இயந்திரத்தைப் படிப்படியாக இராணுவ மயப்படுத்தபடும் முயற்சிகளை ஆரம்பித்து கணிசமானளவு வெற்றியும் பெற்றுவிட்டார். பாதுகாப்புச் செயலர் தொடக்கம் திணைக்களத் தலைவர்கள் வரை பல பதவிகள் இராணுவ அதிகாரிகளால் நிரப்பப்பட்டு விட்டன.

சர்வதேச அளவில் ஒரு போர்க்குற்றவாளியாகவும் படுமோசமான மனித குல விரோத நடவடிக்கையாளராகவும் குற்றம் சுமத்தப்படும் சவேந்திரசில்வா தலைமையிலேயே கொரோனா நோய்த் தடுப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டுள்ளது. உயிராபத்தைப் பொருட்படுத்தாமல் பொதுமக்களுக்கு படையினர் செய்யும் சேவை என்ற பெயரில் சிவில் நிர்வாகத்தின் பிரதான இயங்கு சக்தியாகப் படையினரே செயற்பட்டு வருகின்றனர். சிவில் நிர்வாகத்தினர் அந்த மையச் சக்திக்கு அனுசரணையாகச் செயற்பட வேண்டியவர்களாயுள்ளனர்.

இப்படியான நிலையில் தேர்தல் இடம்பெறும்போது பாதுகாப்பின் பேரிலும் நோய்த் தடுப்பின் பேரிலும் அரச கட்சிக்கு சார்பாகவும் எதிர்க்கட்சியினரை முடக்கும் வகையிலும் படையினர் செயற்படமாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதம் இருக்க முடியுமா? இப்படி ஒரு நீதியானதும் நியாயமானதுமான தேர்தல் நடத்துவது சாத்தியமற்ற நிலையிலும் கூட அரசமைப்பின்படி தேர்தல் திகதி அறிவித்தே தானாக வேண்டுமானால் எமது அரசமைப்பின் மேன்மை பற்றிக் கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது.

இலங்கையில் அரசமைப்பு தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டது என்பது ஒரு புறமிருக்க போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் பற்றி சர்வதேச விசாரணை நடத்த முடியாது எனக் கூறப்படுமளவுக்கு நீதியையும் நியாயத்தையும் மறுதலிக்கும் அம்சங்களைக் கொண்டது.

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான முதலாவது பிரிவின் 28(3) பகுதியும் இப்படியான நியாயங்களுக்கு விரோதமாகச் செயற்படக் கூடிய ஒரு அதிகாரங்களை வழங்கியுள்ளதாகவே தெரிகிறது. ■



# மரணங்களால் மனமுடைந்த மருத்துவர் உயிரிழப்பு

வொஷிங்டன், மே 1

நியூயோர்க் பிரெஸ்பைடீரியன் மருத்துவமனையின் கொரோனா அவசர சிகிச்சைப் பிரிவில் பணியாற்றிய மருத்துவர் லோர்னா பிரீன், கண்ணெதிரே கொரோனா பாதிப்பினால் காப்பாற்ற முடியாமல் நோயாளிகள் மரணமடைவதைத் தாங்க முடியாமல் மனமுடைந்து தற்கொலை செய்துகொண்டார்.

அமெரிக்காவில் கொரோனா பலி எண்ணிக்கை 59 ஆயிரத்தைக் கடந்துள்ள நிலையில் நியூயோர்க்கில் மட்டும் 17 ஆயிரத்து 500 பேர் கொரோனாவுக்குப் பலியாகியுள்ளனர். லோர்னா பிரீன் கொரோனாவினால் ஏற்கனவே பாதிக்கப்பட்டு குணமடைந்து மீண்டும் மருத்துவப் பணிக்கே திரும்பியவர். தானும் பிற மருத்துவர்களும் எப்படிப் போராடியும் நோயாளிகளைக் காப்பாற்ற முடியாமல் கண்ணெதிரே அவர்கள் உயிர் பிரிவதை தன்னால் தாங்க முடியவில்லை என்று அவர் பலமுறை கூறியதாக அவரது தந்தை வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

இவரது வேதனையைப் புரிந்து கொண்ட மருத்துவமனை நிர்வாகம் இவரை வீட்டுக்குச் செல்லுமாறு கூறி விடுவித்தது. எனினும் கடும் மன உளைச்சலில் இருந்த அவர் தற்கொலை செய்துள்ளார். (ம)

### கொரோனா ஊரடங்கால்

# 70 லட்சம் கர்ப்பங்கள் எதிர்பாராமல் ஏற்படும்

### ஐ.நா சபை ஆய்வு



வொஷிங்டன், மே 1

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால், உலக அளவில் 70 லட்சம் கர்ப்பங்கள் எதிர்பாராமல் உருவாகும் என்று ஆய்வறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது ஐக்கிய நாடுகள் சபை.

இது தொடர்பில் ஐ.நா சபை வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

கொரோனாவின் தாக்கமும், அதன் எதிர்வினையும் உலகம் முழுவதும் எப்படி விரிவடையும் என்பது இன்னும் உறுதியாகத் தெரியவில்லை.

அதே சமயத்தில், பெண்களின் நலன்களையும், உரிமைகளையும் பாதுகாக்காவிட்டால், அவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதை உணர்த்த இந்த ஆய்வை வெளியிடுகின்றோம். ஊரடங்கு கட்டுப்பாடுகளால் கருத்தடை சாதனங்களுக்கு தட்டுப்பாடு ஏற்படக் கூடும். உலகம் முழுவதும் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் கொண்ட 114 நாடுகளில் சுமார் 45 கோடி பெண்கள் கருத்தடை சாதனங்களை பயன்படுத்துகிறார்கள்.

ஆனால், தட்டுப்பாடு காரணமாக, 4 கோடியே 70 லட்சம் பெண்களுக்கு கருத்தடை சாதனங்கள் கிடைக்காத நிலை ஏற்படும். இதனால் வரும் மாதங்களில் சுமார் 70 லட்சம் எதிர்பாராத கர்ப்பங்கள் உருவாகும் - என்றுள்ளது. (ம)



# பொருளாதார சிக்கலால் ஊரடங்கைத் தளர்த்தியது சிரியா

டமஸ்கஸ், மே 1

உள்நாட்டுப் போரால் பெரும் அழிவைச் சந்தித்துள்ள சிரியா, கொரோனா நெருக்கடியாலும் பெரும் பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்துள்ள நிலையில் ஊரடங்கு உத்தரவைத் தளர்த்துவதாக அறிவித்துள்ளது.

ஊரடங்கு காரணமாக தொழில்கள் முடங்கின. அன்றாடத் தொழிலாளிகள் வருமானமின்றித் தவித்து வருகின்றனர். இந்நிலையில் ஊரடங்கு கட்டுப்பாட்டை இரவில் தொடரச் செய்து பகலில் தளர்த்தும் முடிவை சிரியா எடுத்துள்ளது. தற்போதைய ஊரடங்கால் நடுத்தர வர்த்தகர்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகினர். ரமழான் மாதத்தில்தான் அவர்களால் குறிப்பிட்ட அளவில் வருமானம் ஈட்ட முடியும். அதனைக் கருத்தில் கொண்டும் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளது என்று சிரிய அரசின் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)


# மிக அவதானமாகச் செயற்படுங்கள் தென்கொரியர்களுக்கு எச்சரிக்கை

சியோல், மே 1

தென்கொரியாவில் கொரோனா கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், 'கொரோனா இன்னும் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. இதனால் மக்கள் மிகமிக அவதானமாகச் செயற்பட வேண்டும்' என்று எச்சரித்துள்ளது உலக சுகாதார நிறுவனம்.

இது தொடர்பில் உலக சுகாதார அமைப்பு விடுத்துள்ள எச்சரிக்கை அறிவிப்பில், இன்னமும் நிச்சயமற்ற சூழலே தென்கொரியாவின் நீடிக்கிறது. பூங்காக்களிலும் உணவகங்களிலும் மக்கள் இடைவெளி இல்லாமல் அமர்ந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. மது விடுதிகள், நைட் கிளப்புகளில் கூட்டம் நிரம்பிவழிகிறது.

பூஸான் நகரில் உள்ள ஒரு மது விடுதி, நைட் கிளப்புக்குச் சென்றுவந்த டேகு நகரைச் சேர்ந்த 19 வயது இளைஞருக்குக் கடந்த வியாழன் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டது. அவர் சென்ற தடங்களில் கிட்டத்தட்ட 480 பேர் சென்று வந்திருப்பதாகத் தற்போது தெரியவந்திருக்கிறது - என்றுள்ளது. (ம)







# சிரியாவுக்குள் புகுந்து இஸ்ரேல் தாக்குதல்!!

டெல்அவிவ், மே 1

சிரிய எல்லைக்குள் ஊடுருவி இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது. ஈரானின் ஆதரவு பெற்ற பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதல் என்ற போர்வையில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் அப்பாவி மக்கள் மூவர் உயிரிழந்தனர்.

டமஸ்கஸ் அருகே உள்ள புறநகர்ப் பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலில் உயிரிழந்தவர்களில் பச்சிளம் குழந்தையொன்றும் உள்ளடக்கம். இந்தத் தாக்குதலுக்கு சிரிய அரசு கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. (ம)

# எவரிடமும் மண்டியிடோம்

*மே தினச் செய்தியில் மகிந்த*

கொழும்பு,மே.1
உலகின் கொடூரமான தீவிரவாதத்துடன் போராடி வெற்றி பெற்ற நாம், நாட்டின் பொருளாதாரத்தை நிலை நிறுத்துவதற்கு எவரிடமும் மண்டியிட மாட்டோம். கடந்த காலத்தின் மீது குற்றஞ் சுமத்தியவாறு புலம்பிக் கொண்டிருக்கும் பழக்கமும் எம்மிடம் இல்லை.
இவ்வாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மே தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,
கொரோனா அச்சத்துக்குள் உலக தொழிலாளர் தினத்தைக் கொண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே தொழிலாளர் மக்களின் பலம், ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையிலான ஊர்வலங்கள் மற்றும் கூட்டங்கள் எதுவுமில்லாத நிலையிலும், தொற்றை ஒழிப்பதற்காகப் போராடுவோருக்கு ஒத்துழைப்போம்.
வெளிநாடுகளிலுள்ள எமது தொழிலாளர்கள், இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகளில் இயங்கும் தொழிற்துறை சார்ந்த ஊழியர்கள், கைத்தொழில்களில் ஈடுபடுவோர் என அனைவரும் கொவிட் தொற்றுநோயின் சவாலை எதிர்நோக்கியுள்ளனர். அந்தத் துறைகளில் பணியாற்றும் இலட்சக்கணக்கான வேலை செய்யும் மக்களின் இருப்பைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது.
தற்போதுள்ள நிலைமைக்குத் தீர்வாக தனித்துவமான பொருளாதாரக் கொள்கையொன்றைக் கட்டியெழுப்பி தன்னிறைவான பொருளாதாரமொன்று தொடர்பாக அனைவரும் நம்பிக்கை வைக்க வேண்டியுள்ளது.
இதுவே கொவிட்19 தொற்றுநோய் மூலம் நாம் கற்றுக்கொண்ட பாடமாகும். நாம் அன்று முதல் அரச துறைக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளைப் பாதுகாத்து, உள்நாட்டுப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டுள்ளோம்.
எனவே, இந்த உலக தொழிலாளர் தினத்தன்று கொவிட் தொற்றுநோய்க்கு எதிராகப் போராடுகின்ற சுகாதாரப் பிரிவினர், முப்படையினர், அரச அதிகாரிகள் உட்பட அனைத்துத் துறைகளையும் வேலை செய்யும் மக்கள் கௌரவிக்க வேண்டும்- என்றுள்ளது. (க)

# உயிர்ப்பலியாக மே நாள் துயரம்

*மாவை கவலை*



யாழ்ப்பாணம்,மே.1
**உலகம் முழுவதும் மே 1 ஆம் திகதி தொழிலாளர் வெற்றித் தினமாக ஆண்டு தோறும் கொண்டாடி வரும் நாள். இவ்வாண்டு துயரம் நிறைந்த நாளாக கொவிட் 19 இனால் உயிர்கள் பலியிடப்படுகின்ற நாளாக மாறிவிட்டது.**

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்துள்ளார். தொழிலாளர் தினத்தை முன்னிட்டு அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
அமெரிக்க நாட்டில் தொழிலாளர்கள் எட்டு மணி நேரம் வேலை கேட்டு நடத்திய போராட்டம் வெற்றி பெற்ற நாளிலிருந்து, உலகம் முழுவதும் தொழிலாளர்கள் தினம் மே நாள் கொண்டாடப்பட்டு வருவது மட்டுமல்ல, பல ஆண்டுகள் வல்லரசு நாடுகளாக அரசு ஆட்சிகளை வெற்றி கொண்ட தொழிலாளர் வர்க்கத்தினர் விழாவாகவும் கொண்டாடப் பெற்று வந்தது.
ஆனால் இன்று கொரோனா வைரஸ் நோயால் நாடுகளின் தொழில் துறைகளும், சமூகப் பொருளாதாரமுமே வீழ்ச்சியடைந்து வருகிறது.
தொழிலாளர், பொது மக்கள் பல கோடி மக்கள் தொழிலின்றி, பசி பட்டினியில் உயிருக்கும், உணவுக்கும் போராட வேண்டிய நிலை உருவாகி வருகின்ற துயரத்தில் நாமெல்லாம் வீழ்ந்து கிடக்கின்றோம்.
இலங்கை நாட்டிலும் உலகிலும் தொழிலாளர் வெற்றித் திருநாளை அரசியல் பலத்தை வெளிப்படுத்தும் வெற்றி நாளாகவும் கொண்டாடிவரும் வரலாற்றில் மே நாளில் இன்று துயரத்தில் வீழ்ந்து விட்டாலும், தொழிலாளர் வெற்றித் திருநாளை உள்ளத்தில் நிறுத்தி எதிர்காலத்தில் வாழும் உரிமையை நிலைநாட்டவும் எழுந்து நின்று உறுதியுடன் திடசங்கற்பம் கொள்ளும் நாளாக மே நாளை நினைவு கூருவோம்- என்றுள்ளது. (க)

# திடீரெனக் கண்விழித்த யாழ்ப்பாணப் பொலிஸார்

யாழ்ப்பாணம், மே.1
ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் இடங்களில் தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கங்களின் அடிப்படையில் வெளிச் செல்ல முடியும் என்று பொலிஸ் அறிவிப்பு விடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் யாழ்ப்பாண நகரில் திடீரென சோதனை நடவடிக்கையை முன்னெடுத்த பொலிஸார், நேற்று வியாழக்கிழமைக்குரிய அடையாள அட்டை இலக்கமான 7 மற்றும் 8 இலக்கங்கள் அல்லாதோரை எச்சரித்து அனுப்பினர். கடந்த செவ்வாய்க் கிழமை தொடக்கம் இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் எந்தவொரு சோதனைகளையும் முன்னெடுக்காத பொலிஸார் நேற்று வியாழக்கிழமை திடீர் சோதனையை குறிப்பிட்ட இடங்களில் மாத்திரம் முன்னெடுத்தனர். (ஒ.5,111)



# பம்பைமடுவில் 9 பேரிடம் பரிசோதனை

வவுனியா,மே.1
வவுனியா பம்பைமடு இராணுவ முகாமில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள வவுனியா மகாகச்சகொடியைச் சேர்ந்த 9 பேரிடம் பி.சி.ஆர். பரிசோதனை நேற்று மேற்கொள்ளப்பட்டது.
வெலிசறையில் அமைந்துள்ள கடற்படை முகாமில் பணியாற்றிய 150 க்கும் மேற்பட்ட கடற்படையினருக்குக் கொரோனாத் தொற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்தநிலையில் குறித்த முகாமில் கடமையாற்றிய கடற்படையினர் மற்றும் அவர்களது உறவினர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.
வவுனியா பம்பைமடுவில் அமைந்துள்ள இராணுவ முகாமில் கடற்படை உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் என 216 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.
இவர்களில், வவுனியா மகாகச்சகொடியைச் சேர்ந்த கொரோனோத் தொற்றுக்குள்ளான கடற்படைச் சிப்பாயின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவருடன் தொடர்புகளைப் பேணியவர்கள் என 9 பேர் பம்பைமடு முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.
அவர்களிடம் சுகாதாரப் பரிசோதகர்களால் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர்களிடம் பெறப்பட்ட மாதிரிகள் கொரோனா தொற்று உள்ளதா என்ற பரிசோதனைக்காக அனுராதபுரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க-18)

## போர் வெற்றியை

# நீங்கள் கொண்டாடினால் நாமும் கொண்டாடுவோம்

*சிவாஜிலிங்கம் 'பளார்' பேச்சு*

யாழ்ப்பாணம், மே 1
போர் வெற்றிச் சின்னங்களை நிறுவி, போர் வெற்றி விழாக்களை நீங்கள் கொண்டாடினால் எங்கள் போராட்ட வெற்றி நடவடிக்கைகளை நாமும் மீள நினைத்துப் பார்க்க வேண்டியிருக்கும் என்று தெரிவித்துள்ளார் எம்.கே.சிவாஜிலிங்கம்.
நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
போர் வெற்றிவிழாவை மே 19 ஆம் திகதி மிகப்பெரிய அளவில் கொண்டாடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று நாங்கள் அறிகின்றோம். இந்த நடவடிக்கையை அரசு கைவிட வேண்டும். இல்லாவிட்டால் நீங்கள் கொண்டாடுவதுபோன்று எங்கள் போராட்ட வெற்றி நடவடிக்கைகளையும் செய்திகளையும் நாமும் மீள நினைத்துப் பார்ப்போம்.
எங்கள் நினைவுச் சின்னங்களை நீங்கள் இடித்து அழித்து உடைத்திருக்கின்றீர்கள்.
குறிப்பாக உங்கள் வெற்றிச் சின்னமாக ஆனையிறவில் ஒரு படையினரின் படமும் கவசவாகனத்தையும் வைத்துள்ளீர்கள். அந்த ஆனையிறவு தளம் எப்போது வெற்றிகொள்ளப்பட்டது. எப்போது அழிக்கப்பட்டது என்ற உண்மைகளை ஏன் சொல்ல மறந்து விட்டீர்கள்?
நாடாளுமன்றம் முன்பாகவும் நினைவுச் சின்னமொன்றை எழுப்பியிருக்கின்றீர்கள். அங்கு வருகின்ற ஒரு சிறுவன் அதைப் பார்த்து ஏன் இந்தச் சின்னம் என்றுகேட்டால் என்ன கூறுவீர்கள். ஆகவே நீங்கள் எழுப்புகின்ற வெற்றிச் சின்னங்கள் செய்கின்ற வெற்றிவிழாக்கள் எல்லாமே எங்களுடைய விடுதலைப் போராட்ட வலாற்றை மீண்டும் ஞாபகப்படுத்தும் என்பதை மறந்துவிட வேண்டாம்.
நீங்கள் வெற்றி விழாக்களை கொண்டாடினால் லட்சக் கணக்கில் உறவுகளின் உயிர்களைப் பறிகொடுத்த சோக தினத்தையும் எழுச்சியாக நாங்கள் நினைவுகூர நிர்ப்பந்திக்கப்படுவோம் என்பதை ஜனாதிபதிக்கும் ஆட்சியாளர்களுக்கும் தெரியப்படுத்துகின்றோம்- என்றார். (ம-20)

காலபந்தாட்டத்தின்போது

# மைதானத்தில் துப்புவதற்குத் தடை விதிப்பு




லண்டன், மே 1
கால்பந்தாட்டத் தொடர்களின் போது மைதானத்துக்குள் எச்சில் துப்புவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
சீனாவின் வுகானில் தோன்றிய கொரோனா வைரஸ் தற்போது உலகின் 210க்கும் அதிகமான நாடுகளில் பரவியுள்ளது. எச்சில் மூலம்தான் கொரோனாவின் பரம்பல் மிகமிக அதிகமாக உள்ளது என்று ஆய்வில் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து கால்பந்தாட்டத்தின் போது வீரர்களுக்கு வைரஸ் தொற்று ஏற்படாமல் இருப்பதற்காக மைதானத்தில் எச்சில் துப்புவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
கொரோனா வைரஸ் பரவலின் போதும்கூட யுவன்டஸ் அணியின் வீரர்கள் சிலருக்கு தொற்று ஏற்பட்டிருந்தது. இதையடுத்தே மைதானத்தில் எச்சில் துப்புவதற்குத் தடை விதிப்பதற்கு சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனம் பரிசீலித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கொரோனா வைரஸைவிட மிகமோசமானவன் நீதான்

சர்வான் மீது கெய்ல் குற்றச்சாட்டு

ட்ரினிடாட், மே 1
கொரோனா வைரஸை விடவும் நீ மோசமானவனாக உள்ளாய் என்று சர்வானை மிகக் கடுமையாகச் சாடியுள்ளார் கெய்ல்.
கரீபியன் பிறீமியர் லீக் தொடரில் ஜமைக்கா அணிக்காக விளையாடி வந்த கெய்ல் சமீபத்தில் அந்த அணியில் இருந்து விடுவிக்கப்பட்டார். ஜமைக்கா அணியில் இருந்து விடுவிக்கப்பட்டமைக்கு அந்த அணியின் துணைப் பயிற்சியாளர் சர்வான்தான் காரணம் என்று கெய்ல் தற்போது குற்றஞ்சாட்டியுள்ளார்.
இது தொடர்பில் தெரிவித்துள்ள கெய்ல்: இப்போதைக்கு சர்வான். நீ கொரோனா வைரஸைவிட மோசமானவனாக இருக்கிறாய். ஜமைக்கா அணியில் இருந்து என்னை கழற்றி விட்டதில் உனது பங்கு மிகப்பெரியது என்பதை அறிவேன். அணியின் உரிமையாளருடன் உள்ள நெருக்கத்தை பயன்படுத்தி அணியை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அவர் முயற்சிக்கிறார். அவருக்கும், மற்ற வீரர்களுக்கும் அணியில் நிறைய பிரச்சினை இருக்கிறது. நாங்கள் இருவரும் நண்பர்கள் என்று அவர் சொல்லி இருக்கிறார். ஆனாலும் இன்னும் ஏன் எனது அழைப்பை எடுக்கவில்லை. நீ ஒரு பாம்பு. பழிவாங்கி விட்டாய். கரிபீயன் மக்களால் அதிகம் நேசிக்கப்படும் நபர் நீ கிடையாது. உன்னிடம் முதிர்ச்சி இல்லை. நம்ப வைத்து முதுகில் குத்திவிட்டாய்.
நீங்கள் எல்லாம் என்னை குறைவாக மதிப்பிட்டு விட்டீர்கள். 1996ஆம் ஆண்டு கிரிக்கெட் களத்தில் நுழைந்து இன்னும் விளையாடிக்கொண்டிருக்கும் ஒரே வீரர் நான் தான். மற்றவர்கள் ஓய்வுபெற்று விட்டார்கள். அந்த சகாப்தத்தில் கடைசி வீரராக எஞ்சி நிற்கிறேன். இன்னும் களத்தில் வலுவான வீரராக உள்ளேன். தொடர்ந்து வெற்றியாளராக வலம் வருவேன் - என்றார். (ம)




# பந்துக்கு எச்சில்தடவுவதற்கு தடை விதிக்கலாம் ஐ.சி.சி!!

லண்டன், மே 1
கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர், கிரிக்கெட் ஆட்டங்களின் போது பந்துக்கு எச்சில் தடவுவதற்கு ஐ.சி.சி தடைவிதிக்க வாய்ப்புள்ளது.
கொரோனா போன்ற வைரஸ்கள் எச்சில் மூலமே அதிகம் பரவுகின்றன. இதனால் இந்த வைரஸ் போன்ற வைரஸ்கள் வீரர்களுக்குப்பரவாமல் இருப்பதற்காக பந்துக்கு எச்சில் தடவிப்பளபளப்பாக்கும்முறையை இல்லாமல் செய்வதற்கு ஐ.சி.சி பரிசீலித்து வருகின்றது. (ம)



# தென்னாபிரிக்காவின் தலைவராக வர விரும்புகின்றார் வில்லியர்ஸ்!

ஜோகன்ஸ்பார்க், மே 1
தென்னாபிரிக்க அணியின் தலைவராக வருவதற்கு விருப்பம் வெளியிட்டு வில்லியர்ஸ், கொரோனா வைரஸின் ஆதிக்கம் முடிவுக்கு வந்த பின்னரே இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.
தென்னாபிரிக்க அணியில் தனது மறுவருகை தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள வில்லியர்ஸ் மேலும் தெரிவித்ததாவது:
தென்னாபிரிக்க அணிக்கு தலைமை தாங்குமாறு மீண்டும் எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. என் தரப்பில் எனக்கு ஆசையாகத்தான் இருக்கிறது. ஆனால் நான் சிறந்த திறனில் இருக்க வேண்டும். என் சக வீரர்களைவிட நான் சிறப்பாக விளையாட முடிந்தால்தான் தலைவராவது சிறப்பாக அமையும் என்று கருதுகிறேன். இந்த திறனில் இருந்தால்தான் அணியில் இருப்பதற்கான தகுதியுடையவனாக இருப்பேன். அப்போதுதான் விளையாடும் 11 வீரர்களில் ஒருவராக என்னை கருத எனக்கு மனம் வரும். நானும் மற்ற வீரர்களும் உணர வேண்டும். இவர் இந்த இடத்துக்குத் தகுதியானவர் என்று. இப்போதைக்கு வைரஸ் ஆதிக்கம் செலுத்தி வருகிறது, கிரிக்கெட் போட்டிகள் பற்றிய நிலவரம் என்னவென்பது தெரியவில்லை' - என்றார். (ம)

# ராவிட்டை நினைவூட்டும் ரிஷப் பன்ட்!

றெய்னாவின் கண்டுபிடிப்பு

புதுடெல்லி, மே 1
அவ்வப்போது ராவிட்டை நினைவூட்டுகின்றார் ரிசப் பன்ட் இவ்வாறு தெரிவித்துள்ளார் சுரேஸ் றெய்னா.
பன்ட் குறித்து றெய்னா மேலும் தெரிவித்ததாவது:
ரிஷப் பன்ட் மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர். அவர் நன்றாக விளையாடினால் மகிழ்ச்சியாக இருக்கும். நன்றாக விளையாடும்போது யுவராஜ், சேவாக்போல் ஆதிக்கம் செலுத்தும் வீரராக உள்ளார். அவர் சில வேளைகளில் ராவிட்டையும் நினைவூட்டுகின்றார். விராட் கோலி ஒரு திடமான வீரர். அவரிடம் நிறைய ஆற்றல் உள்ளது. அவர் விஷயங்களை கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்றார். (ம)




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற் லிமிட்டெட் நிறுவத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.05.2020இல் வெளியிடப்பெற்றது.